# திராவிடநாடு

12—11—61 | வார வெளியீடு | விலை 16 காசு


சாந்தி குமாரி

# வெட்கமில்லை!

—[முத்து]— தமிழ்ச்செல்வி

உரத்துக்காலை வடக்கிலே உருக்கு ஆலை வடக்கிலே
அணுவுக்குலையும் வடக்கிலே ஆய்வுக்கூடம் வடக்கிலே
வளமிக்கணைகள் வடக்கிலே வாழ்வுச்சோலை வடக்கிலே
சூதுசெய்து வாழஎண்ணும் சூழ்ச்சிக்கும்பல் வடக்கிலே.

ஆனல்,

அப்பளங்கள் தெற்கிலே உப்பளங்கள் தெற்கிலே
அறிவு ஆற்றல் தெற்கிலே அன்பும்பண்பும் தெற்கிலே
வாழ்வுக்கான வளங்கள்யாவும் அமைந்திருந்த போதிலும்
அறிவுமங்கி அடிமைபேசும் அமைச்சர்குழுவும் தெற்கிலே.

எனினும்,

வெட்கமில்லை வெட்கமில்லை வெட்கமென்ப தில்லையே?
இன்னுமிளித்த வாயராய் 'ஏகநாடு' பேசுதல்
இழிவுகாட்டும் அழிவுகூட்டும் என்றிருக்கும் போதினும்
வெட்கமில்லை வெட்கமில்லை வெட்கமென்ப தில்லையே?

# குற்றவாளி

என்னுடைய மனம் காலையில் என் நண்பன் சொன்ன அந்தச் சொற்களிலேயே சுற்றிச்சுற்றி நிழலாடின. அவன் எப்பொழுதுமே அப்படித்தான், எதையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசித்தீர்த்து விடுவது. அதனால தனது வாழ்வில் எத்தனையோ நல்ல சூழ்நிலைகளையெல்லாம் நழுவவிட்டுவிட்டு நடுவீதியில் நின்றிருக்கிறான். அதுபற்றியும் அவன் கவலைப்படுவதில்லை. 'எதையும், எங்கும், எதற்கும் எதிர்பார்க்காதவனுக்கு எல்லாம் ஒன்றுதான் என்று அவன் அடிக்கடி கூறுவதுண்டு. அது அவனைப் பொறுத்தவரை உண்மைதான் என்றாலும்...

அவனுடைய கொள்கைகளை என்னால் செரிக்கமுடிவதில்லை. ஏதோ நானும் அவனும் எப்படியோ இதயங் கலந்த நண்பர்களாகிவிட்டோம் என்றாலும், அவன் வேறு — நான் வேறுதான். இருவரும் 'இருதுருவங்கள்தான்.

நான்கூட அடிக்கடி எண்ணுவதுண்டு அவனைப்போலவே நாமும் இருக்கவேண்டும் என்று. ஆனால், எண்ணங்கள் எழுந்து கொண்டிருக்க, அதே நேரத்திலே பழகிப் பழகிப் பழக்கப்பட்டுவிட்ட பழைய மனம் என்னையும் அறியாமலேயே பழைய பள்ளத்தையே நோக்கிப் போய் விழுந்துவிடுகிறது. என்ன செய்ய...? பழக்கமனம் இருக்கிறதே அது நாயைப்போன்றது. அதை நடுவீட்டில் குளிப்பாட்டி வைத்தாலும் அது போகவேண்டிய இடத்திற்குப்போய், பார்க்கவேண்டிய இடத்தைப்பார்த்தே தீரும் என்றாலும், நாய்வாலைப் போன்றதல்ல, நிமிர்த்தவே முடியாத நிரந்தரமாகிவிட.

அவன் காலைப்பேச்சு என்னை மட்டுமா? நான் சார்ந்திருக்கிற துறையையே அல்லவா! அத்துறையைச் சார்ந்த என்போன்ற டாக்டர்கள் அத்தனைபேரையும் அல்லவா! அவன் தாக்கிவிட்டான்.

அத்தாக்குதல் தனிப்பட்ட என்னைப் பொறுத்தமட்டில் என்றால் கூடப் பொறுத்துக்கொண்டு, வஞ்சிக்கோனுக்குத்தான் இதுவாடிக்கையான பழக்கமாயிற்றே என்று நகைத்துச்சிரித்து நழுவியிருப்பேன். சமுதாயப் பிரச்சினை என்று சற்றுச் சாரீரத்தை உயர்த்திப் பேசித்தீர வேண்டியே இருந்தது. அப்பொழுது தான் எனக்குத் தெரிந்தது சுயநலம்

**கரந்தை—கணேசன்**

என்பது தனிமனிதனிடம் எப்படி உருவாகிறது என்பது. பாதுகாப்புக்காகப் பிடிக்கும் குடைதான் சமுதாயம், அக்குடையே காற்றில் பறக்க ஆரம்பித்துவிட்டால் தனித்துப் போராடியாவது இழுத்துப் பார்த்துவிடவேண்டியிருக்கிறது.

வஞ்சிக்கோனோடு வார்த்தைக்கு வார்த்தை தடைகட்டினேனேயொழிய, அவன் சொன்ன சொற்கள் யாவும் எவ்வளவு அப்பட்டமான உண்மைகள்? அந்த உண்மைகளை எவ்வளவு ஆழமாகச் சிந்தித்து அவன் கூறியிருக்கிறான்? என்ன அப்படி, என்கிறீர்களா? நானே எங்களைப்பற்றிய குறைமனத்தை எப்படிக் கூறித்தொலைப்பது. அது போகட்டும்.

நான் மருத்துவ மனைக்கு வந்தபொழுது நடந்த நிகழ்ச்சியைத்தான் கூறுகின்றேனே! அதுபோதும், காலையில் நண்பனுடன் போராடினேன், சற்று கழித்து நண்பனுடன் போராடியவற்றிலே ஒன்று. என் கண் முன்னாலேயே! என்னாலேயே! என் மனம் விழித்துக்கொண்டது. அதன் விளைவு.........?

இப்பொழுது அந்த எண்ணங்கள், நிகழ்ச்சிகள் யாவும் மலரைச் சுற்றி நாதம் எழுப்பிக்கொண்டு வரும் வண்டுக் கூட்டத்தைப்போல மன அரங்கிலே எதிரொலிக்கின்றன.


“டாக்டர்கள் எல்லாம் அரசினரால் அனுமதிக்கப்பட்ட கொலையாளிகள்” காலையில்தான் அவனுடன் போர். அதற்குப் பிறகு...?

*

மருத்துவமனைக்கு வந்தவுடன் “இன்று பிண அறுவை” என்றார்கள்; வந்ததும் வராததுமாக இந்தச் சொல்தானா முதலில் காதில் விழ வேண்டும் என்று கருவியவனாகவே பிண அறுவைக் கொட்டகைக்குச் சென்றேன். கழுதைக்கு வாழ்க்கைப்பட்டால் கத்தித்தானே ஆக வேண்டும். போகும் பொழுதே பக்கத்தில் வந்தவனிடம் ஆணா? பெண்ணா? 'ஆண்'.

உள்ளே திறந்து பார்த்தேன், என் மனத்தில் யாரோ ஓங்கி ஒரு அடி அடித்ததுபோன்று பட்டது. இதயத்தை அப்படியே பிடித்துக் கொள்ளவேண்டும்போல் ஆகிவிட்டது. அங்கே என்னால் நிற்கமுடியவில்லை. மெல்ல நகர்ந்தவனாக ஓய்வறைக்குச் சென்று அமர்ந்து ஒரு பெட்டி சிகரெட்டை ஒன்றுவிடாமல்

(16-ம் பக்கம் பார்க்க)



# மரண ஊசி!

—[சே. தமிழ்க்கூத்தன்]—

கிழக்குப் பார்த்த வாசலைக் கொண்ட அந்த வைத்திய சாலையின்முன் வெளியில், இரும்புக் கம்பியினுல் பின்னப்பட்ட ‘கிருதி’ அடைக்கப்பட்டிருந்தது. அதன் மேல் ‘டாக்டர் மோகன் எம். பி. பி. எஸ்.’ என்று பித்தளை எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட பலகை காட்சியளித்தது. காலை ஏறு வெயிற் கிரணங்களின் ஒளிபட்டு அந்தப் பித்தளை எழுத்துக்கள் பொன்னென மின்னிப் பிரகாசித்துக் கொண்டிருந்தன.

உள்ளே, டாக்டர் மோகன் சிகிச்சைக்காக வந்திருந்த நோயாளிகளை, ஒவ்வொருவராகப் பரிசோதித்து,அவரவர்களுக்குக்கேற்ற சிகிச்சையைச் செய்துகொண்டிருந்தார்! டாக்டர் மோகன், கெட்டிக்காரார் என்பது அந்த வட்டாரத்திலே பிரசித்தம்.........அவர் கொடுக்கும் மருந்தைவிட, அவரது அன்பு மொழிகளில்தான் பெரும் நம்பிக்கை இருந்தது, அவருடைய வாடிக்கைக்காரார்களுக்கு!......இல்லாவிட்டால் தனியார்துறை நிர்வாகத்திற்குட்பட்ட அந்த வைத்தியசாலையில் இவ்வளவு கூட்டம் இருக்குமா?.........

வெளியில் போட்டிருக்கும் பெஞ்சில் கந்தப்பன் உட்கார்ந்து இருந்தான்! ‘முதலாளி எவ்வளவு நல்லவராகிவிட்டார்!’ என்று முணுமுணுத்தது அவனது வாய். எனக்குச் சாதாரணமாகத்தான் உடம்பு சரியில்லை என்று சொன்னேன், அதுக்குள்ளே, அவரு “நம்ம டாக்டருக்கு ஒரு கை லெட்டர் எழுதித் தர்ரேன், போய் உடம்பைப் பார்த்துக்கிட்டு வா’’ன்னு சொல்லிப்புட்டாரு! நான் வேண்டாங்கண்ணு சொன்னேன். அதை அவரு கேட்கலே. ‘நான் கூட டாக்டரைப் பார்க்கப் போக வேண்டியிருக்கு; அப்படியே நானும் சொல்லிட்டு வர்ரேன்னு சொல்லி என்னைத் தொந்தரவு பண்ணி அனுப்பிச்சாரே! அவர் மனம் எவ்வளவு திருந்திடிச்சு............!

‘டாக்டர் மோகன்’ எல்லா நோயாளிக்கும் சிகிச்சை அளித்து அனுப்பிவிட்டார்! ஆனுல்; ஒரே ஒரு நோயாளிக்குச் சிகிச்சை அளிப்பதில்தான் தாமதம்! தாமதம் மட்டுமல்ல, மனப் போராட்டமும்கூட!...

ஊசிக் குழாயில் மருந்தை நிரப்பித் தூக்கிப் பிடித்தார்! இன்னும் கொஞ்ச நேரத்திற்கெல்லாம், ஒரு ஏழை அப்பாவியின் உடலில் இந்த மருந்து செலுத்தப்பட்டுவிடும்!......பிறகு?......மருந்து வேலை செய்யத் தொடங்கும்! நாளைக்கு, ஒவ்வொரு நாடியாக ஓய்ந்துகொண்டே வரும். இறுதியில்; சப்த நாடிகளும் ஓய்ந்து, இயக்கம் நின்றுவிடும்!

டாக்டர் தொழில் புரிவதற்குச் சற்றுக் கல்நெஞ்சம் வேண்டியதுதான்! எல்லாவற்றிலுமே அன்புகாட்ட முடியுமா?உடலின் ஒவ்வொருபாகங்களையும்அறுத்துச் சிகிச்சைசெய்கிறோம் என்பது உண்மைதான். அந்தப் பழக்கத்தை, துணிவை, தீய காரியங்களுக்குப் பயன்படுத்தலாமா? டாக்டர் என்றுல் அவர்களுக்கு மனச்சாட்சி செத்துவிட்டது என்ரு பொருள்? ஒரு உயிரை வீணுகச் சேதமாக்கமாட்டேன்! அவன்தான் அவருக்கு அப்படி என்ன தீங்கு செய்திருப்பான்......என்ன குற்றம் செய்திருந்தாலும்; ஒருவனுடைய உயிரைப் போக்குவது நியாயமா?... நிச்சயம் இவனுடைய உயிரைக் காப்பாற்றியே தீருவேன்!

இந்த முடிவின் எல்லைக்கு வந்ததும், டாக்டர் மோகனின் மனக்கண் முன்னுல் காலையில் வந்த தனவந்தரின் உருவமும் அவர் தந்த இரண்டாயிரம் ரூபாயும் தோன்றின.

பணத்தைத் திரும்பக் கொடுத்து விட்டால் போகிறது! அப்படியென்ருல், அவருடைய பகையை அல்லவா ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்!

முள்ளை முள்ளால்தானே எடுக்க வேண்டும். சூழ்ச்சியைச் சூழ்ச்சியால்தான் வெல்லவேண்டும்! அவரது மூளை துரிதமாக வேலை செய்தது!......

உன் பெயர் என்னப்பா!...

கந்தப்பனுங்க!

உனக்குப் பெண்டாட்டி பிள்ளை இருக்கிறதா?......

கலியாணம் ஆயி அஞ்சாறு வருசம் ஆச்சுங்க! ரெண்டு பொண்ணும் ஒரு புள்ளையும் இருக்குங்க!...

பாவம்! அவனது உழைப்பை நம்பி மூன்று உயிர்கள் வாழவேண்டி இருக்கும்போலும்! நல்லவேளை,நான் கொஞ்சம் அவசரப்பட்டிருந்தால்?... டாக்டருக்கு அவன்மீது இரக்கம் ஏற்பட்டது.

நீ ஏதாவது உனது முதலாளிக்குத் தீங்கு செய்திருக்கிருயா?

மனதாலேகூட என் மொதலாளிக்குத் துரோகம் செய்ய நென்ச்சதில்லைங்க!......

உண்மையாக நீ ஒன்றும் செய்யவில்லையே?.........நீ உண்மையைச் சொல்லாவிட்டால்...அவர் மிரட்டினுர். அவன் மிரண்டான்! பின்னர் விவரத்தைக் கூறி நிலையை விளக்கிக் கனிவோடு கேட்டார்.

அவன் தயங்கினுன்......

பரவாயில்லை சும்மா சொல்லு! நான் அதற்கேற்பப் பரிகாரம் செய்கிறேன். எதாக இருந்தாலும் பயப்படாமல் சொல்லு! எந்தக் கஷ்டமும் வராமே பார்த்துக்கொள்கிறேன். அவனுடைய மனதைத் தேற்றினுர்.

நாம் விரும்பாமலே, நம்மை அறியாமலே சில விஷயங்கள் நடந்துவிடுகின்றன. அதற்குச் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் சாதகமாகவே அமைந்துவிடுகின்றன. அப்படி நடந்ததுதான் அந்த நிகழ்ச்சியும்...!

"முதலாளி அன்று ஊரில் இல்லை. காவலுக்காக என்னை படுத்துக் கொள்ளுமாறு கூறிவிட்டு அவர் போய்விட்டார். அன்றிரவு நான் வெளித் திண்ணையில் படுத்திருந்தேன்!

நடுநிசி!...நான் நன்ருக அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தேன்......என் உடலை ஏதோ கனம் அழுக்குவது போன்ற உணர்ச்சி. அயர்ந்து உறங்கும் உறக்கத்திலிருந்து முற்றும் விடுபடாத நிலை......

மோகினி பிசாசுகளின் கதைகளை என் பாட்டி சொல்லக் கேட்டிருக்கிறேன். அதுதான் இப்படி......

பயத்திஞல் உடல் வியர்த்துக் கொட்டியது! வாய் குழறி அலறினேன். என் வாயைக் கரம் ஒன்று வந்து பொத்தியது!......

பலம்கொண்ட மட்டும் அந்தக் கரத்தைத் தட்டிவிட்டேன்! கலகல வென்ற வளையொலி எழும்பி ஓய்ந்தது!

......

கந்தப்பா...! நான்தான் சத்தம் போடாதே!!

தூக்கம் கலைந்து எழுந்து உற்று நோக்கினேன். யார் என்பதை அறிந்து பெரும் அதிர்ச்சி அடைந்தேன்!...

சீ...! நீயும் ஒரு பெண்ணு...? நினைத்தேனே அன்றி அதை வெளி படுத்தவில்லை. இந்த மோசமான காரியத்தை வேறுயாராவது செய்திருந்தால் எனது ஆத்திரத்தின் முழுச் சக்தியும் பயன்பட்டிருக்மோ என்னவோ?...

ஆ... நீங்களா...! அடங்கிப் பணி புரிந்தே பழக்கப்பட்ட என் வாயிலிருந்து வார்த்தைகள் வெள்ிவந்தன!

மறுகணம்... அந்தத் தையலின் தளிர்கரங்களுக்கு இடையில் நான் சிக்கி இருந்தேன்!

அந்த மென்மையான பாச உணர்ச்சியிஞல் என் உடலெல்லாம் புல்லரித்தது; மெய்மறந்தேன்! நான்உணர்ச்சியற்ற மரக்கட்டையா என்ன...

பின்னர் நிலையை உணர்ந்தேன்! அவளோ ஏவல் விடும் எசமானி, நானே இட்ட வேலையைத் தட்டாமல் செய்யும் அடிமை! தவறை அறிந்தேன்...... பிடியிலிருந்து முரண்டி விடுவித்துகொள்ள எத்தனித்தேன்!

நீ என் விருப்பத்திற்கு இணங்கா விட்டால்... நாளை ஐயா வந்ததும் சொல்லி...

எனக்கு வேலை போய்விட்டால்...? என் மனைவி மக்கள் படும் துன்பத்தை மனக்கண் முன்ஞல் கொண்டுவந்தேன். பிறகு வாளா இருந்துவிட்டேன்!

நாட்கள் சில நகர்ந்தன. நான் முன்போல் பணத்திற்குக் கஷ்டப்படவில்லை. பணம் என் கையிலே புரண்டுகொண்டிருந்தது!...

அடுத்தடுத்துச் சில சம்பவங்கள் நிகழ்ந்தன! பழக்கத்தின் காரணமாக அது எனக்குக் குற்றமாகத் தோன்றவில்லை. சுவைகண்ட பூனையானேன்."

கந்தப்பன் சொல்லி முடித்தான். அதுவரை மிகவும், கவனத்தோடு கேட்டுவந்த டாக்டர் மோகன், அவன் உயிரை இழக்கவேண்டிய நிலைக்கு ஆளான காரணத்தை அறிந்துகொண்டார்.

குற்றம் செய்யத் தூண்டியதோடு தானே அதற்கு நிலைக்களஞக அமைந்தவளுக்கு மட்டும் தண்டனை இல்லை. ஆஞல்; நேர்மையைக் கையாண்டால் தனது வாழ்க்கை வறண்ட பாலை நிலையாகிவிடுமே என்ற ஒரேகாரணத்துக்காகச் சந்தர்ப்பத்திஞல் தவறியவனுக்கு மட்டும் மரணதண்டனையா...?

டாக்டர் எழுந்து, பீரோவைத் திறந்து, பத்து, பத்து ரூபாய் நோட்டுகளை எடுத்து அவனிடம் நீட்டியபடியே, 'நீ இன்னும் இரண்டொரு நாட்களில் ஊரைவிட்டுக் கிளம்பி எங்காவது சென்றுவிட வேண்டும்' என்று கூறிஞர்.

முதலில் பணத்தைப் பெற்றுக் கொள்ள மறுத்தான்! பின்னர், அவருடைய, வற்புறுத்தலால் பெற்றுக் கொண்டான்.

ஐயா! என்னைக் காப்பாற்றி, என் பொண்டாட்டி புள்ளைகளைத், திண்டாடவிடாமே, செஞ்ச நீங்க நல்லா இருக்கணும்! எனக்கூறிக் கைகூப்பி வணக்கம் தெரிவித்து விடைபெற்றுத் திரும்பிஞன்.

"பணம் படைத்தவர்கள் எதை நினைக்கிருர்களோ, அதைச் செய்தே விடுகிருர்கள்! நீதி, நேர்மை, இவைகளைப் பற்றி கவலைப்படுவதில்லை." அவன் நடந்துசெல்வதைப் பார்த்துக்கொண்டே இருந்த டாக்டர் மோகன் இப்படித்தான் எண்ணிஞர்.

★


## தி. மு. க.

## ★ கலைக் கண்காட்சி ★

நவம்பர் இறுதிக்குள் தி. மு. கழகக் கலைக் கண்காட்சி காஞ்சிபுரத்தில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மிக வேகமாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது. மதுரை மாநாட்டுக் கண்காட்சியில் இடம் பெற்றதைவிட மற்றும் பல அரசியல் விளக்கப் படங்களும் இதில் இடம் பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**டி. எம். பார்த்தசாரதி,**
கலைக் கண்காட்சி அமைப்பாளர்.

# தேசிய ஒருமைப்பாடு! (2)

மலர் 20] ஆண்டு சந்தா ரூ. 8 (12—11—61) தனிப்பிரதி 16 காசு [இத

'இனம்' என்பது எளிதில் போக்கிவிடக்கூடிய உணர்ச்சியன்று. ஏன் எனில் அது பல்வகையான காரணங்களால் ஏற்பட்டு வளர்ந்து உறுதிப்படுவது ஆகும். ஒருவர்க்கொருவர் மொழியால், பழக்கவழக்கங்களால், உண்ணும் உணவால், உடுத்தும் உடையால், உறையும் வீட்டால் ஒன்றுபடும்போதே இனம் என்ற பிணைப்பும் பிடிப்பும் ஏற்படுகின்றது. யாரோ பார்த்து நீங்கள் அனைவரும் இந்த இனம்; அவர்கள் அனைவரும் அந்த இனம் என்று இட்டுக் கட்டிக் கூறியது அன்று இந்த இனம். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, வாழ்ந்து வரும் நிலத்தின் தட்டவெட்ப, சூழ்நிலை காரணங்களால் இருந்துவரும் 'இனம்' என்ற அமைப்பினை ஒருவர் தீர்மானத்தினுல், ஒரு பேச்சினுல் நோக்கிவிடலாம், என்று கருதுவோர் வரலாறு அறியாதவர்கள் என்றுதான் கூறுதல் வேண்டும்.

எடுத்துக்காட்டாக, இந்தியத் துணைக்கண்டத்தில் வாழும் மக்கள் பல்வேறு வகையான இனத்தினர் ஆவர். இவர்களுக்கு இடையில் பொதுவான பல பிரச்சினைகள் உள்ளன. ஒன்றுபட்டு வாழவேண்டிய நிர்ப்பந்தமும் நெருக்கடியும் நேர்ந்துள்ளது. வேண்டும் என்றே விரும்பிச் செய்யப்பட்ட பலவகைக் கலப்புகள் உள்ளன. எனினும் இன்னமும் இத்துணைக்கண்டத்து மக்கள் 'ஓரினம்' ஆக இயலவில்லை—முடியாது.

மற்ற நாடுகளிலும் இதே நிலைமை இருப்பதைக் காணுகின்றோம்.

இந்நிலையை உணராமல் இந்தியத் துணைக்கண்டத்து மக்களைத் 'தேசியம்' என்ற நூலால் பிணைத்து ஒன்றாக்கிவிடுவோம் என்று சிலர் புது முயற்சியில் ஈடுபட்டிருப்பதைக் காணுகின்றோம்.

இவர்களைவிட அநுபவமும், நுண்மாண் நுழைபுலமும் அமைந்த பலர் இதற்கு முன்னர் பலமுறை இவ்வாறு முயன்றுள்ளனர், எனினும் அவர்கள் முயற்சி பலனளிக்கவில்லை; பலன் அளிக்க இயலாது என்பதைக் காலம் காட்டி நிற்கின்றது.

ஆனுல், இன்று புதிதாக இப்பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொள்வோர் தாங்கள் மிகவும் சாமர்த்திமாக நடந்துகொள்ளுவதாக நினைத்து, ஒருமைப்பாட்டு மாநாட்டிற்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் அழைக்காமலே விட்டுவிட்டனர்.

விரும்புகின்றனர்களோ, இல்லையோ, தென்னகத்தைப் பொறுத்தவரை இன்று திராவிட முன்னேற்றக் கழகம் மாபெரும் இயக்கமாக வளர்ந்துள்ளது. இதன் கருத்துக்கள் பலருடைய இதயங்களைக் கவர்ந்து, அவர்களை ஈர்த்துள்ளது. இத்தனை பெரிய இயக்கத்தினை அலட்சியப்படுத்திவிட்டதினுல் அவர்கள் விரும்பிய 'ஒருமைப்பாடு' அடைய முடியாதது என்பதை ஒப்புக்கொண்டவர்கள் ஆகின்றனர்கள்.

அமைச்சர் சுப்பிரமணியனர் அவர்கள் ஏன் அழைக்கவில்லை என்பதற்கான காரணத்தைச் சென்ற கிழமை வெளியிட்டுள்ளார். 'திராவிட முன்னேற்றக் கழகத்தினர்க்கு ஒருமைப்பாட்டில் நம்பிக்கை இல்லை; எனவே அவர்களை அழைக்கவில்லை' என்பது அவர் கூறியுள்ள காரணம்.

இல்லாததை ஏற்படுத்தத்தான் மாநாடு கூட்டினர்கள். நோயாளிக்குத்தான் மருந்து தேவை. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 'ஒருமைப்பாட்டில் நம்பிக்கை இல்லை என்று சொல்லுகின்ற அமைச்சர், உண்மையாகச் செய்திருக்க வேண்டியது, கழகத்தையும் அழைத்துத் தம் கருத்தைக் கூறி, அதனை ஏற்றுக் கொள்ளச் சொல்லவேண்டும். இன்னின்ன காரணங்களினுல் காஷ்மீரியும் கன்னடியனும் ஒரு இனத்தினர் தாம் என்பதை வாதிடவேண்டும். தன் வாதத்திற்குச் சான்றுகளைத் தொகுத்துத் தன் திறமையை நிரூபிக்க வேண்டும்.

தன் வாதத்திற்கு எதிர்வாதம் செய்ய இயலாது கழகம் வாளா இருக்குமானுல், தன் கருத்தை ஏற்றுக் கொள்ளுமாறு சொல்லலாம்.

காஷ்மீரியும், கன்னடியனும், மராட்டியனும், மலையாளியும் வேறு வேறு இனத்தினரே என்பதைக் கழகம் விளக்கிடுமானுல், அமைச்சர் அமைதியோடு அமர்ந்து கேட்டல் வேண்டும். தரும் சான்றுகள் உண்மைதானு என்பதை ஆராயலாம். 'ஆம்' என்பதை உணருவாராயின் 'உண்மை தெளிந்தேன்' என்று அறிவித்துவிட வேண்டும்.

இவ்வாறு இருந்தாலே அது பலருடைய கருத்தை அறிய, ஆராயக் கூட்டப்பட்ட மாநாடாக இருக்கும்.

அவர்களுக்கு நம்பிக்கை இல்லை, எனவே அவர்களை அழைக்கவில்லை என்பது அறிவுடைமையும் அல்ல—நியாயமும் அல்ல.

# பிரிவினை

—[பொன்னழகன்]—

உலகம் சூரியனிலிருந்து விடுபட்டுப் பிரிந்து வந்தது என்றே ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகின்றார்கள்; அதை நாம் மலைபோல் நம்புகின்றோம். அப்படிப் பிரிந்து வந்த பிறகே, இருள் சூழ்ந்த உலகம் ஒளிபெற்றுப் பல்வகையிலும் பயன்பெற்று விளங்குகிறது என்பதை அறிகிறோம். அறிந்து மகிழ்கிறோம். இதுபோலவே ஒவ்வொரு கிரகங்களும் பிரிந்திருக்கின்றன என்பது உண்மைதானே? புலவர்கள், பிரிந்திருக்கும் கிரகங்களை உவமையாக்கித் தமது காவியங்களில் எத்தகைய இன்பமூட்டுகின்றனர்?

தாய் வயிற்றிலிருந்து குழந்தை பிரிந்துவிடுகிறது! தாய், சேய் இருவருக்குமே விடுதலை கிடைத்துவிடுகிறது. குழந்தை வளர, அதன் அறிவு வளர்ந்து வளம்பெற — சிந்தனை உதயமாகி மிளிர, பிரிவினையே மூலகாரணமாகிறது. அந்தச்சிந்தனை ஒளியிலே செயலாற்றத் துணியும்போது, அப்பப்பா! எத்தனை எதிர்ப்புக்கள்? எத்தனை சூழ்ச்சிகள்!! அத்தனையும் தாங்கிக் கொள்ளுகிற உள்ளமும், அஞ்சா நெஞ்சின் உறுதியும் எதிர்ப்பாளர்களுக்குஎடுத்துக் காட்டுவதால்தானே இன்றைய ஏழை மக்கள் இவ்வளவு முன்னேறியிருக்கிறார்கள்?

உடல்களில் ஒரு குறிப்பிட்ட காலம்வரை உயிரை விட்டிருந்து, பிறகு இயற்கை அந்த உடல்களிலிருந்து உயிர்களைப் பிரித்துவிடுவதும் நன்மைக்குத்தானே! அங்ஙனம் பிரியாவிடின் அந்தரத்திலிருக்கும் உலகம் தாங்குமா? ஆற்று நீரிலே மிதந்துபோகும் பரிசலில் ஆள் எண்ணிக்கை அதிகமாகிவிட்டால், அது கவிழ்ந்துவிடுவதுபோல், மாந்தரோடியந்தமற்ற உயிர்களின் பாரம் தாங்காமல் கவிழ்வதற்கு ஏதுவாகாதா உலகம்? காற்று எங்கு உற்பத்தியாகிறது, எங்கு தங்குகிறது என்பது நமக்கு எப்படித் தெரியாதோ, அப்படிப்பட்ட உயிர்கள் பிரிந்து போக வேண்டுமென்ற உறுதியான தத்துவம் எவ்வளவு மேன்மையானது? எனவே, உடல்களிலிருந்து உயிர்கள் நாளும் பிரிந்து செல்லட்டும்?

பிரிவினையால் பல நன்மை விளைகிறது என்பது பொய்யாகுமா? புல்லிலிருந்து நெல்லுப் பிரிவதால் எவ்வளவு நன்மை? மலர்களிலிருந்து மணம் பிரிவதால் நமக்கு எவ்வளவு மகிழ்ச்சி — சுகம்? கருமுகிலிடமிருந்து பிரிந்துவிழும் மழைத்துளிகளால் எத்தனை நன்மைகள் உண்டாகின்றன? ஒரு பலாப்பழம். அதில் பல சுளைகள். ஒவ்வொரு சுளைகளும் பிரிந்து பிரிந்து இருப்பதால்தானே அவைகளுக்கு அவ்வளவு சுவை? பாலிலிருந்து வெண்ணெயைப் பிரித்த பின்னர்தானே தனியானதொரு சுவையும் சக்தியும் பிறக்கின்றது? பலாப்பழம் போலவும் பால் போலவும் உலகமிருக்கிறது. பலாச்சுளைகள்போலவும், வெண்ணெயைப் போலவும் தனித்தனியாக நாடுகள் பிரியவேண்டும்! தாய் என்பதற்கும், என் தாய் என்பதற்கும் எவ்வளவு வேற்றுமையுண்டோ, அவ்வளவு வேற்றுமையுண்டு உல்கம் என்பதற்கும், என் நாடு என்பதற்கும்.

உலகில் வாழும் உயிர்களுக்கு இன்றியமையா வகையில் இரண்டு கண்கள் அமைந்துவிடுகின்றன. அந்தக் 'கண்' என்று பெயர் பெற்ற இரண்டு எண் உறுப்புக்களும் ஏன் தனித் தனியாகப் பிரிந்திருக்கவேண்டும்? 'மூக்கு' என்ற உறுப்புக்கு மத்தியில் ஒரு விட்டம் குறுக்கே வந்து ஏன் இரண்டு துவாரங்களாகப் பிரிக்கவேண்டும்? பிறர் கூறுவதை —புற ஒலிகளை உணர்த்துகிற இரு செவிகளும், ஊர்ந்து செல்ல உதவும் இரு கால்களும், அரியபல செயல்களாற்றும் இரு கரங்களும் ஏன் இரண்டிரண்டாகப் பிரிந்திருக்கின்றன? அவைகளை இயற்கையே பிரித்து வைத்து விட்டதென்றால், பிரியத் துடிக்கும் ஒவ்வொன்றும் இயற்கையால் தூண்டப்படுவதென்பதுதானே உண்மையாகும்?

பறவை தனது குஞ்சுகளை இறகு முற்றும்வரைதான் பாசத்தோடும் நேசத்தோடும் பாதுகாத்து வளர்க்கின்றது. தாய்ப் பறவையிடம் படிப்படியாகப் பாச உணர்ச்சி குறைவதைக் காணுகிற குஞ்சுகள், இயல்பாகவே பிரிந்துபோக எண்ணுகின்றன! என்றாலும், நன்றிமறவாக் குஞ்சுகள் ஒன்றி வாழ விரும்பி நெருங்கினாலும்கூடப், புத்தி வருமளவுக்குக் கொத்தி அனுப்புகின்றனவே தாய்ப் பறவைகள்? இந்தப் பிரிவினையை இயற்கையென்பதா—செயற்கையென்பதா?

தேன் சொட்டும் இசை நயத்தில் மனிதர்கள் — ஏன் பறவைகள்கூட மெய் மறந்து சுவைக்கின்றன! இசை அப்படி மெய்மறக்க வைக்கும் காரணமென்ன? ஒவ்வொரு இராகங்களுக்கும் ஆங்காங்கே எல்லைகளுண்டு. அந்த எல்லைக்குள் மற்ற இராகங்களின் இசைநயத்தை வெளிப்படுத்த முடிவதில்லை! ஏனெனில் அவ்வளவு கட்டுப்பாடு! எனவே, அதிலிருந்து விடுபட்டுத் தனித்தியங்கினாலொழியச், சீரிய நலம்பயக்காது-எனக் கருதுகிற கிளை இராகங்கள் இயல்பாகவே பிரிந்துவிடுகின்றன. நாட்டையிலிருந்து சங்கராபரணமும்— சங்கராபரணத்திலிருந்து தோடியும் — தோடியிலிருந்து பைரவியும் பிரிந்தன என்கிறார்கள். பைரவியின் உட்கிளையாகச்சிந்துபைரவி, ஆனந்த பைரவிஎனவும் பிரிந்ததாம்! அப்படிப் பார்த்தால், இவைகள் தனித் தனியாகப் பிரிந்தபின்னரே கேட்போர்க்கு சுவையூட்டுகின்றன! கழுதை கத்தும்போது 'காம்போதியும்,' நாய் ஊளையிடும்போது 'கல்யாணி'யும், தாய்மார்கள் தாலாட்டும்போது 'நீலாம்புரி'யும் — கட்டியழும்போது 'முகாரி'யும் ஒலிக்கின்றன. இவைகள் நிலைமைக்கேற்றபடி சுவையூட்டுவது, தன்னிச்சையாகப் பிரிந்திருப்பதால்தான் என்பதை எவரும் மறுக்கமுடியாது?

இன்றுநாம்எண்ணற்ற விஞ்ஞான சாதனங்களின் வசதியோடு வாழ்ந்துவருகிறோம். இவைகள் நமக்கு எப்படிக் கிடைத்தன? ஆராய்ச்சியாளர்களின் அயரா உழைப்பாலும், அவர்களிடம் மண்டிக்கிடந்த பகுத்தறியும் சக்தியினாலும் அல்லவா? பகுத்து (வகுத்து) என்றாலே பிரிவினையைத்தானே குறிக்கின்றது! பகுத்தறிவால் நன்மைகள் வளர்கிறதென்றால், பிரிவினையால் நன்மைகள் வளர்கிறதென்று தானே பொருள்? ஏன், பிரிவினையைக்கண்டு வியப்படைகிறவர்கள் கூட மகிழ்விடமிருந்து பிரிந்துவந்து தானே துயரடைகிறார்கள்? நன்மை பெற விழையும் நல்லவர்கள், 'பிரிவினை'யென்னும் அமுதுண்டு மகிழ்வார்களே தவிர, மருட்சியடைய மாட்டார்கள்!

எனவே, பிரிவினை என்பது எந்த வகையிலும் தீதானதல்ல — தேவைப்படுவது — விரும்பத்தக்கது —நன்மைகள் தரத்தக்க வலிமையுடையது என்பதனை விளக்க அதிக மேற்கோள்கள் தேவையில்லை அல்லவா.

★

# கழிவிரக்கம்

''வேலை வெட்டி பார்க்கிறதுக்குத்தான் வக்கில்லாமே போச்சுன்னு, இந்தக் குழந்தைகளையாவதுவீட்டிலே ஒழுங்காப்பார்த்துக்கிட்டு இருக்கக்கூடாது! என் தலையெழுத்து நான் உழைச்சி உங்களுக்குப் போடவேணும்னு இருக்குது—ஊர்லே, உலகத்திலே எல்லாம் இப்படித்தான் நடக்குதா?'' தன் மனையாள் கூறிய கடுமொழிகள் தன் காதில் விழாததுபோல், தன்பாட்டிற்குத் தலை கவிழ்ந்தவண்ணம் அந்த ஒட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்தான் முத்தையன்.

கடந்த ஆறேழு மாதங்களாக விமலா என்ன சொன்னாலும் முத்தையன் எதிர்த்து ஒரு வார்த்தை பேசுவது கிடையாது. பேசவேண்டுமென்று அவன் நினைப்பதையும் விட்டுவிட்டான். விமலா ஆத்திரப்பட்டுக் கூறும் ஒவ்வொரு வார்த்தையும் அவள்மீது அவன் பரிதாப உணர்ச்சி கொள்ளத்தான் உதவிற்று.

மூன்று குழந்தைகள். அவனும், அவளுமாகப் பெரியவர்கள் இருவர். ஆக ஐந்து உயிர்கள் வாழவேண்டும். குடும்பத்தில் வேறு வருவாய் கிடையாது—விமலா கொண்டுவரும் சம்பளத்தைத் தவிர.

அவனே இயந்திரத்தைப்போல் ஆற்றல் உடையவன்தான். வேலை கிடைக்கவில்லை. கடந்த இரண்டாண்டு காலமாக வேலையில்லாமலே அவன் காலத்தை ஓட்டுகிறான். தன்னையொத்த ஆண்களின் எதிரில் போவதற்கே அவனுடைய மானஉணர்வு இடங்கொடுப்பதில்லை. வெட்கத்தால், ஆற்றாமையால் கூனிக் குறுகிப்போய் உட்கார்ந்து விட்டான் அவன் — அந்த ஓட்டுத் திண்ணையில். இப்போதெல்லாம் அந்த இடத்தைவிட்டு அவன் அப்பால், இப்பால் நகர்வதே கிடையாது.

* * *

ஆசிரியைப் பயிற்சிப் பள்ளியிலிருந்து வெளியில் வந்த விமலாவுக்குத் தயாராக வேலை காத்திருந்தது. வேலையை ஒப்புக்கொள்ள அவள் வையம்பட்டிக்கு வந்தாள்.

வையம்பட்டி இரயில் நிலையத்தில் தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் நின்றது. பெட்டி, படுக்கையோடு, மற்றும் முக்கிய பொருள்களோடு வந்த விமலா பரக்கப் பரக்கத்தான் வண்டியிலிருந்து இறங்கினாள். பெட்டியை எடுத்துக்கொண்டாள். படுக்கையை எடுத்துக் கீழேவைத்தாள். வண்டி கிளம்பிவிட்டது.

**க. இராசன்**

''ஐயயோ, இன்னொரு மூட்டையை எடுத்துக்கொள்ளவில்லையே! வண்டி கிளம்பிவிட்டதே!'' பதறிக்கொண்டு உரக்கக் கூறினாள் விமலா. வண்டிக்குள்ளிருந்தவர்களிடம் கையை நீட்டி, அங்கே எடுக்காமல் விடப்பட்டு விட்ட மூட்டையை எடுத்துப் போடும்படி உரத்துக் கூறி வேண்டினாள்.

அந்தப் பெட்டியிலிருந்தவர்கள் எல்லாம் விமலாவின் கூவலைப் பொருட்படுத்தாமல் சும்மா அவளை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவள் ஏன் கூவுகிறாள் என்று புரிந்துகொண்டவர்கள்கூட, அவளுடைய மூட்டையை எடுத்துக் கீழே போடுவதற்கு மனமில்லாமலோ, நினைவில்லாமலோ அவளையே வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இரயில் நிலையத்தின் ஒரு கோடியில் நின்ற நிலையத் தலைவர் பச்சைக் கொடியை ஆட்டிக் கொண்டுநின்றார். கடைசிப் பெட்டியிலிருந்த வண்டிக் காவலரும் தன் பச்சைக் கொடியை விரித்து நீட்டி அசைத்துக்கொண்டிருந்தார். வண்டி நகர்ந்துகொண்டிருந்தது.

விமலா ஒன்றும் தோன்றாமல் நடை மேடையில் கையை விரித்துக்கொண்டு நின்றாள். அப்போது சட்டென்று வண்டிக்குள் ஒருவன் தாவி ஏறினான். விமலாவின் மூட்டையை எடுத்துக் கீழே போட்டான். அவனும் நகர்ந்து விரைவாகப் போகும் எக்ஸ்பிரஸ் வண்டியிலிருந்து கீழே குதித்துக்கொண்டான்.

குதித்தவன் மூட்டையோடு விமலாவின் அருகில் வந்தான்.

''இது சின்ன ஸ்டேஷன். இங்கே எக்ஸ்பிரஸ் வண்டி இரண்டு நிமிடங்கள் மட்டுந்தான் நிற்கும்''

''நல்ல வேளை, நீங்கள் சமயத்தில் வந்து உதவினீர்கள்'' என்று வாய் திறந்து கூறிய விமலா தன் நன்றியைக் கண்களாலும் வெளிப்படுத்திக் கொண்டாள்.

முத்தையன் — விமலா சந்திப்பு இப்படித்தான் தொடங்கியது.

'அவர் ஏதோ படித்திருப்பார் போலிருக்கிறது. விறகுக் கண்டிராக்டரிடம் கணக்கு எழுதும் வேலை செய்கிறாராம். சம்பளம் குறைவாகத்தான் இருக்கவேண்டும்.

வேலையும் நல்ல வேலையில்லைத்தான். முரட்டு மனிதர்களோடு, காட்டுவாசிகளோடு அடிக்கடி பழகுகின்ற வேலை. இலாப நோக்கத்தைக் கருத்திற்கொண்டு சில சமயம் கயமைத்தனமாகக்கூட நடந்துகொள்வோருடன் தொடர்பு கொள்ளும் வேலை.—ஆமாம், இவருக்கு வேறு வேலை கிடைக்கவில்லையா?—சேச்செ,அப்படியெல்லாம் சொல்லக் கூடாது. எந்த வேலையையும் நாணயமாகவும், கண்ணியமாகவும் செய்யலாம். தொழிலில் ஏற்றத் தாழ்வு என்பதையே நினைக்கக் கூடாது!'

முத்தையனைப்பற்றி நினைவு வந்த போதெல்லாம் விமலா தனக்குள் இப்படி எண்ணிக்கொண்டாள்.

முத்தையன் புது மனிதனாகிக் கொண்டு வந்தான். நாள் தவருமல் விமலா இருக்கும் இடம் தேடி அவன் சென்றது பெரிதல்ல. அவளுக்காக அவன் செலவிட்ட நேரம் பெரிது. அவள் தன்மீது நன்மதிப்புக் கொள்ளவேண்டும். தன்னைப்பற்றி உயர்வாக எண்ணவேண்டும் என்று அவன் எடுத்துக்கொண்ட முயற்சி பெரிது. அதற்கென அவன் தனக்குக் கிடைக்கும் அற்ப சொற்ப வருவாயில் செலவு செய்த தொகையும் பெரிது.

முத்தையனை எந்த நிலையிலும் நேசிக்கும் மனப்பாங்கைப் பெற்றிருந்தாள் விமலா. என்ருலும், அவன் தன்னையே சுற்றிக்கொண்டிருப்பதை அவள் விரும்பவில்லை. தனக்காக வீண் செலவு செய்வதை அவள் வரவேற்கவில்லை. தன் பொருட்டு அவன் தன் வேலைகளையும், கடமைகளையும் புறக்கணித்து அசட்டையாக நடந்துகொள்வதையும் அவள் கட்டோடு வெறுத்தாள். வெறுத்தாள், வரவேற்கவில்லை, விரும்பவில்லை. அவை அவள் உள்ளத்தோடுதான். வெளிப்படையாக எதையும் முத்தையனிடம் அதிர்ந்து சொல்ல அவளால் முடியவில்லை. தன்னுடைய மறுப்பும் கண்டிப்பும் வேறு வகையில் பொருள் கொள்ளும்படி செய்து விடுமோ என்ற அச்சமும், தயக்கமும் அதற்கு முக்கியமான காரணங்கள். எனவே, முத்தையனின் போக்குப்படி இயங்கவிட்டு வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்பதைத் தவிர, பிறிதெதையும் அவளால் செய்வதற்கு முடியவில்லை.

ஒருநாள் முத்தையன் சொன்னுன்:

"நம்மைப்பற்றி அக்கம் பக்கத்திலுள்ளவர்கள், வெளியார்கள் ஏதேதோ விபரீதமான கதைகள் கட்டுகிருர்கள். ஏளனமாகப் பேசுகிருர்கள். அவற்றிற்கெல்லாம் ஒரு முடிவை உடனடியாகக் காண வேண்டும்.''

விமலா பதில்பேசாமல் யோசனையிலாழ்ந்தாள்.

"உன் அன்னையாரிடமும், அண்ணனிடமும் நம் முடிவைப்பற்றியும், நிலையைப்பற்றியும் இப்போது எடுத்துச் சொல்லிவிட்டால் என்ன?'' பின்னும் தன் பேச்சை வினவாகத் தொடுத்தான் முத்தையன்.

விமலா அதற்கும் மௌனமாகவே இருந்தாள்.

''ஓகோ, அவர்கள் பம்பாயிலிருப்பதால் இந்தச் செய்தியை எப்படி உடனே போய் நேரில் சொல்வது என்று யோசிக்கின்ருயா?-அவர்கள் தொலைவிலிருப்பதுகூட ஒரு வகையில் நல்லதுதான். அதிகம் செலவு இல்லாமல் பதினைந்துகாசுக் கவரோடு அவர்களுடைய உள்ளக்கிடக்கையை — இல்லை, இல்லை, சம்மதத்தைத் தெரிந்துகொள்ளலாம். எப்படி நான் சொல்வது?''

"உம்.........'' என்று வாயைத் திறக்காமலே ஒலி கிளப்பியவாறு முத்தையனை ஏறிட்டு நோக்கினுள் விமலா. அப்படி அவள் பார்த்த பார்வை புதுப்பார்வை.

"பதினைந்து காசோடு, அந்தச் சிறு தொகைக்காக எடுத்துக் கொள்ளும் முயற்சியோடு முடிந்து போகும் செய்தி நம் வாழ்க்கையென்று நினைத்துவிட்டீர்களா நீங்கள்? என் அன்னையும், அண்ணனும் அங்கிருந்தவாறே நம் திருமணத்திற்கு ஒப்புக்கொண்டு விடுவார்கள் என்று நீங்கள் எந்த வகையில் எதிர்பார்க்கிறீர்கள்?—அது போகட்டும். உங்கள் பெற்ருேரின் நிலைமையென்ன? அவர்கள் சம்மதம் தெரிவித்துவிட்டார்களா? அல்லது தெரிவிக்கத்தான் எளிதில் ஒருப்படுவார்களா? என்னுடைய அன்னையும், அண்ணனும் வேண்டுமானுல் சாதி வேறுபாட்டைப்பற்றியும், ஏற்றத் தாழ்வுகளைப்பற்றியும் அதிகம் கவலை கொள்ளமாட்டார்கள். ஒரு வகையில் இல்லையென்ருலும், பிறிதொரு வகையில் முயன்ருல், வேண்டினுல் அவர்களை இணங்கச் செய்துவிடுவது அவ்வளவு அரிது அல்ல. உங்கள் பெற்ருேரின் நிலை அப்படியல்லவே! உங்கள் பேச்சிலிருந்தே, நடவடிக்கையிலிருந்தே அவர்கள் சாதிக் கட்டுப்பாடுகளை அசாதாரணமாக — அளவுக்கு மீறி மதித்து நடப்பவர்கள் என்பது தெரிகிறதே! — எவ்வளவுதான் நீங்கள் பிரயாசை எடுத்துக் கொண்டாலும், அவர்களை வழிக்குக் கொண்டுவரமுடியாதேஉங்களால்''. இப்படியெல்லாம் விமலா வாய் திறந்து பேசவில்லை. அவள் பார்த்த அந்தப் புதுவிதப் பார்வை அப்படிப் பேசிற்று.

முத்தையன் சொன்னதுபோலவே இவர்களுடைய காதல் விவகாரம் ஊரில் உள்ள எல்லாராலும் கண்ட கண்ட இடங்களில் கண்டபடியெல்லாம் பேசப்படும் ஒரு செய்தியாகி விட்டது. அங்கே ஒளிவு, மறைவுக்கு இடமில்லாமலே போய்விட்டது. இனி விமலாவோ முத்தையனே இரண்டில் ஒன்றை விரைந்து முடிவு பண்ணிவிட வேண்டும். முத்தையனைப் பொறுத்த மட்டில் ஊரார் பேச்சு ஒன்றுமே செய்ய முடியாது என்ற நிலை. ஆனுல் விமலாவின் நிலை அப்படியல்ல. அவர்களின் காதல் விவகாரம் அவள் தொழிலுக்கே உலை வைத்துவிடும் எல்லையில் வந்து நின்றுகொண்டிருந்தது.

விமலா தன் நிலையைத் தானே தன் அன்னைக்கும், அண்ணனுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டிய கட்டாயத்துக்கு வந்துவிட்டாள். ஒன்று, தன் காதல் தொடர்பைத் துண்டித்துக்கொள்ளவேண்டும். அல்லது காதல் கொண்டவனையே கடிமணம் புரிந்துகொள்ள வேண்டும். இரண்டில் ஏதாவது ஒன்றைச் செய்தால்தான் விமலாவால் தன் உத்தியோகத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். பேதையவள் குழம்பிக் கலங்கி நின்ருள். முத்தையனே எதையும் துணிந்து புரியும் ஆற்றலையிழந்து திசை தெரியாமல் தவித்தான்.

இந்நிலையில் ஊராரின் முறையீடு எல்லை தாண்டிவிட்டது. அந்த முறையீடு விமலாவை உத்தியோகத்திலிருந்து நீக்கவில்லை. வேறு ஊருக்கு அவளை அது மாற்றி அனுப்ப வழி வகுத்துவிட்டது.

'இதுவும் ஒருவகையில் நல்லது தான். இந்தத் துணிச்சல் இல்லாத முத்தையனின் காதலே நமக்கு வேண்டாம். பெரியவர்களின் சம்மதம் பெருத இந்தக் காதலின் பின் விளைவு விபரீதமாகமுடிந்துவிட்டால், அதனுல் அதிக வருத்தமும், தொல்லையும் நம்மைத்தான் வந்து சாரும். போகுமிடத்தில் இந்தக் காதலை மறந்து நிம்மதியாக இருந்துவிடலாம்.' இப்படி எண்ணிய விமலா செய்தியை முத்தையனிடம் தெரிவிக்காமலே அவள் மாற்றப்பட்டிருந்த சமுத்திரம் என்ற ஊருக்கு மூட்டை கட்டினுள்–கிளம்பிப்போய் விட்டாள்.

முத்தையனும் ஏதோ வெறுப்போடு விமலாவை இரண்டு நாள் சந்திக்காமலிருந்து விட்டான். மூன்ருவது நாள் விமலா மாற்றிக் கொண்டு போய்விட்டாள் என்ற செய்தி திடுமென அவன் செவிக்கு எட்டியது. செய்தி கேட்டதும் அவன் உள்ளம் நிலைகொள்ளாமல் தவித்தது. உடனே விமலாவைப் போய்ப் பார்க்கவேண்டும். சொல்லாமற் கொள்ளாமல் போய்விட்டதற்காக அவளைக் கண்டவாறு திட்டிவிட்டு வரவேண்டும் என்று அவன் நினைத்தான். அவன் நினைப்பையும், துடிப்பையும் புரிந்துகொண்டு, அவனுக்கு உதவுதற்கென்றே வந்தது போல் அந்த வேளை வையம்பட்டி நிலையத்தில் வண்டி வந்து நின்றது–திருச்சி போகும் வண்டி. ஓடி ஏறிக் கொண்டான் வண்டியில் அவன். 'சமுத்திரம் என்ன வெகுதொலைவா!' என்று தனக்குள் திரும்பத் திரும்ப முனகிக்கொண்டே போனுன் அவன்.

புதிய ஊருக்குப் போய்விட்ட விமலா பள்ளியிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தாள். இரயில் நிலையத்தைத் தாண்டி அவள் செல்லவேண்டும். நிலையத்தருகில் அவள் வந்தபோது, எதையோவிட்டு விட்டவள்போல், யாரையோ எதிர் பார்த்துத் தேடுபவள்போல் சுற்றுமுற்றும் மருள மருளப் பார்த்துக் கொண்டு நின்றுவிட்டாள். அருகில் வந்த முத்தையன் நெடுநேரம் நின்று பார்த்துவிட்டு, ஒருமுறை உரக்கச் செருமித் தன் வரவை அறிவித்த பிறகுதான், அவள் தன்னுணர்வு பெற்ருள். 'வாருங்கள்' என்று அவள் வாய் அவனை அழைக்க வில்லை. அவள் கண்கள் அந்தச் சொல்லின் பொருளை ஆயிரமடங்கு பெரிதாக்கி, ஆழமாக்கி அவனை வரவேற்றன.

கண்டபடி திட்டிவிட்டுப் போக வந்த முத்தையனே கனிவும், குளிர்மையும், காந்தத் தன்மையும் நிறைந்த அவள் எழில் வதனத்தையே உற்று நோக்கிக்கொண்டிருந்தான். எல்லாவற்றையும் மறந்த — நினைப்பதையே மறந்த பித்தனுகிவிட்டான் அவன்.

'வாருங்கள்' என்று அவள் வாய் திறந்து பேசச் சற்றுநேரம் ஆகியது. வளர்ப்பவளைப் பின்பற்றிச் செல்லும் ஆட்டுக்குட்டியைப்போல் அவன் அவளைப் பின் தொடர்ந்து சென்ருன்.

'அவள் யார்?' என்று அவனிடம் வந்து கேள்வி போடுவோர் அங்கு யாரும் இருக்கமுடியாது. இருக்க வில்லை. ஆனுல், 'அவன் யார்?' என்று அவளிடம் வினுத் தொடுப்போர் அங்கு பலர் இருந்தார்கள்.

இப்போது விமலாவுக்குத் துணிச்சல் வந்துவிட்டது. அந்தத் துணிச்சல் ஆய்ந்தோய்ந்து பார்த்தபின் முடிவு செய்யப்பட்ட துணிச்சலோ இல்லையோ, அது பிடிவாதமான துணிச்சல். பெண்மைத் துணிச்சல். அந்தத் துணிச்சல் முன் எதுவுமே அற்பம்; யாருமே அற்பம்;–உலகமே அற்பம்.

அவள் சொன்னுள்:

"இவர் என் கணவர். இரண்டு மாதங்களுக்குமுன்னர்தான் எங்கள் திருமணம் நடந்தது.—பதிவுத் திருமணம்"

முத்தையன் கதிகலங்கிப் போனுன். வேறு வழியில்லை சமுத்திரம் கிராமத்திலேயே அவனும் தங்கி விட்டான். அன்று மூன்ரும் நாள் முத்தையன் விமலா பதிவுத் திருமணம் இடையூறு ஏதுமின்றி நன்றே நடந்தேறியது. அந்தத் திருமணத்திற்கு முத்தையனைச் சார்ந்தோர் வரவில்லை. விமலாவைச் சார்ந்தோர் வரவில்லை. அந்தத் திருமணத்தைப் பற்றிய செய்தியே அவர்களுக்கெல்லாம் தெரியாது. அதற்காக முத்தையனே விமலாவோ கவலை கொண்டதாகக் காட்டிக்கொள்ள வில்லை.

சமயத்தில் எல்லாம் வந்து கைகொடுப்பதுபோல் திருச்சியில் முத்தையனுக்கு வேலை கிடைத்தது பழைய காண்ட்ராக்டரிடம்,

முத்தையன்—விமலா இல்வாழ்க்கையின் வசந்த காலம் முடிந்து கொண்டு வந்தது. அவர்கள் இரண்டு குழந்தைகளுக்குப் பெற்ருேராகிவிட்டனர். மறுபடியும் விமலா வேறு ஊருக்கு மாற்றப்பட்டாள். அந்த ஊர் இரயில் போக்கு வரத்தே இல்லாத காட்டுப் பகுதி. வேறு வழியில்லை. விமலா கிளம்பினுள். முத்தையன் தன் அலுவலைக் கவனித்துக்கொண்டு சிறிது காலம் திருச்சியிலிருந்தான்.

சமயத்தில் எல்லாம் கைவிடுவது போல் திடீரென்று முத்தையன் பணியாற்றிய காண்ட்ராக்டிற்குச் சொந்தக்காரர் தன் தொழிலையே மாற்றிக்கொண்டு விட்டார். வேலையிழந்தான் முத்தையன். வேறுவழி தோன்றவில்லை. விமலாவின் இருப்பிடத்திற்கே அவன் வந்து சேர்ந்தான்.

கடந்த இரண்டாண்டு காலமாக அந்தக் காட்டூரில், வேலையிழந்த முத்தையன் பித்தனைப்போல் உலவிக்கொண்டிருக்கிருன். வேலையிழந்த அன்றே, அவன் எல்லாவற்றையும் இழந்தவனுகிவிட்டான். பாவம், விமலா! அவள் உழைத்து இவனுக்குப் போடவேண்டிய நிலை. அதற்காக முத்தையனை அவள் வெறுக்கவில்லை. அவனுக்காக அவள் கொண்டுவிட்ட கழிவிரக்கம் மிகுதி. சில சமயம் அதையும் மீறி அவள் ஆத்திரம் அவனை வேறு மாதிரி பேசவிட்டுவிடுகிறது.

★

விற்பனையாகிறது!

அண்ணு அவர்களின்

கருத்தோவியம்

**கம்பரசம்**

(2-ம் பாகம்)

விலை 50 காசுகள்

விபரங்களுக்கு:

சுகுமாரன் பதிப்பகம்,
80, சி. எஸ். செட்டித் தெரு,
சி. காஞ்சிபுரம்.




பெஸ்கி, எம். ஏ.

சட்டத்தை ஏற்படுத்தி, அதை நடைமுறையில் அமுலுக்குக் கொண்டுவந்து செயலாற்றும் உரிமை தன்னாட்சி உரிமை என்று அழைக்கப்படுகிறது. இந்த உரிமை ஒரு நாட்டிற்கு மிகவும் அவசியமாகத் தேவைப்படுகிறது. இந்த உரிமை இல்லாத எந்த நாடும் அரசியல் வரலாற்றில் 'நாடாகக்' கருதப்படுவதில்லை. நாட்டிற்கு இந்த உரிமை கொடுக்கப்படுகிறது என்றால், அந்த நாட்டிலிருக்கிற அரசாங்கம் இந்தத் தன்னாட்சி உரிமையை உடையதாயிருக்கிறது என்று பொருள்படும். இந்த உரிமை வேறு எந்த மனித சக்திக்கும் கிடையாது. அதைத் தவிர வேறு எந்த வித உயர்ந்த சக்தியும் கிடையாது.

இந்தத் தன்னாட்சி உரிமை என்ற அரசியல் தத்துவத்தை முதன்முதல் அரசியலுக்கு அறிமுகப்படுத்தியவர் பிரெஞ்சு எழுத்தாளர் போடின் (1530-1596) என்பவர். போடினால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் தத்துவத்திற்கு அவருக்குப் பின் வந்த பல அரசியல் அறிஞர்கள் பல விளக்கங்கள் தந்து இந்தத் தத்துவத்தை வளர்ச்சி பெறச் செய்தார்கள். குறிப்பாக குரோஷியஸ், ஹாப்ஸ், லாக், ரூசோ, பெந்தம் போன்ற பல அரசியல் அறிஞர்கள் இந்தத் தன்னாட்சி உரிமைத் தத்துவத்திற்கு விளக்கங்கள் அளித்து, அதை வளர்ச்சிபெறச்செய்தார்கள். அரசியல் அறிஞர்கள் ஒவ்வொருவரும் இந்தத் 'தன்னாட்சி உரிமை'த் தத்துவத்திற்கு என்ன விளக்கம் தந்திருக்கிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

தத்துவத்தை அறிமுகப்படுத்திய பிரெஞ்சு எழுத்தாளர் போடின் விளக்கம் இதுதான். பல குடும்பங்கள் சேர்ந்து ஒரு நாடாக உருவாகின்றன. பல குடும்பங்களை உள்ளடக்கிய இந்த நாட்டை ஆள்வதற்கு உயர்ந்த அதிகாரத்தை உள்ளடக்கிய ஒரு சக்தி தேவைப்படுகிறது. இந்த உயர்ந்த அதிகாரம் சட்டத்தின் கையில் இருக்கிறது. சட்டத்திற்கு ஒவ்வொரு மனிதனும் கட்டுப்பட்டே தீரவேண்டும். ஆகவே சட்டத்தை உருவாக்குகிற அந்தச் சக்தியே எல்லா அதிகாரங்களையும் உள்ளடக்கிய உயர்ந்த சக்தி. சட்டத்தையே உண்டாக்குகிற அந்தச் சக்தி நிச்சயமாகச் சட்டத்தைவிட அதிக அதிகாரம் உள்ளதாக இருக்கவேண்டும். மக்களையே கட்டுப்படுத்துகிற சட்டங்களை உருவாக்கும் அதிகாரம் உள்ள ஒரு சக்தியை உடைய நாடு தன்னாட்சி உரிமையுள்ள நாடு என்று சொல்லுகிறோம். இதை ஒரு உதாரணத்தின் மூலம் பார்ப்போம். ஒரு நாட்டை மன்னன் ஒருவன் ஆண்டு வருகிறான். மன்னன் இடுகிற சட்டங்களுக்கு மக்கள் கட்டுப்படுகிறார்கள். அந்த மன்னனுக்கு ஒரு சட்டத்தை மாற்றவோ, திருத்தவோ, அல்லது நீக்கவோ உரிமை அல்லது அதிகாரம் இருக்கிறது. இந்த அதிகாரத்தையே தன்னாட்சி உரிமை என்று கூறுகிறோம். எந்தச் சட்டத்தையும் மாற்ற மன்னனுக்கு அதிகாரமிருக்கிறது. ஏனென்றால், மன்னன் சட்டத்தையே உருவாக்கும் அதிகாரம் பெற்றவன். சகல அதிகாரங்களையும் உடையவன், ஆனால் தன்னாட்சி உரிமையை உடைய இந்த அதிகாரங்களும்கூட ஒரு சில சட்டங்களினால் கட்டுப்படுத்தப்படுகிறது என்று போடின் கூறுகிறார். அதாவது இயற்கையின் சட்டங்களுக்கு இந்தத் தன்னாட்சி உரிமையையுடைய மன்னன் கட்டுப்பட்டே தீரவேண்டும். உதாரணமாக ஒவ்வொரு மனிதனும் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்பது இயற்கையின் சட்டம். இதற்கு விரோதமாகச் சகல அதிகாரங்களை உடைய சக்தியான மன்னனோ அல்லது வேறு ஒரு சக்தியோ செயலாற்றக்கூடாது. இதற்குக் கட்டுப்படவேண்டும். அதேபோன்று மக்கள் விருப்பத்திற்கு மாறாக இந்தச் சக்தி சட்டங்களை இயற்றக்கூடாது. மக்களுக்கு விரோதமான சட்டங்களை இயற்றக்கூடிய அதிகாரம் இருந்தாலும், மக்களுடைய விருப்பத்திற்கு விரோதமாக எந்தச் சட்டத்தையும் இந்தச் சக்தி ஏற்படுத்தக்கூடாது. உதாரணமாக, சகல அதிகாரங்களையும் உடைய இந்தச் சக்தி (இந்தச் சக்தி தனிப்பட்ட ஒரு மன்னனாகவும் இருக்கலாம், அல்லது பலபேர் அடங்கிய ஒரு மக்கள்சபை அல்லது சட்டங்களை இயற்றும் சபையாகவும் இருக்கலாம்) மக்களுடைய சம்மதம் இல்லாமல் அவர்களால் தாங்க முடியாத அளவு வரிப்பளுவைப் போட முடியாது. மக்கள் விருப்பத்தின் பேரில் அவர்களுக்கு நன்மை தருகிற சட்டங்களையே உருவாக்க முடியும். இதுதான் தன்னாட்சி உரிமைக்கு போடின் தரும் விளக்கம்.

தன்னாட்சி உரிமைக்கு அரசியல் அறிஞர் குரோஷியஸ் ஒரு விளக்கம் தருகிறார். அடிமைப்பட்டுக்கிடக்கும் ஒரு நாடு விடுதலை பெற்றுச் சட்டங்களை உருவாக்கி அதைத்தானே செயல்படுத்தும் உரிமையை

அடைந்ததென்றால், அது தன்னாட்சி உரிமை என்று கூறுகிறார். சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டிற்கு விளக்கம் அளித்த தாமஸ் ஹாப்ஸ், தன்னாட்சி உரிமை, அதாவது, சட்டமியற்றும் சகல அதிகாரங்களும் மன்னனிடமே இருக்கவேண்டும் என்று கூறுகிறார். மக்களுக்கு விரோதமான சட்டங்களை அவன் இயற்றினாலும், அந்தச் சட்டங்களுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்று கூறுகிறார். மன்னனுக்குச் சட்டத்தையே உருவாக்கும் அதிகாரங்கள் இருப்பதால், அவன் சட்டத்தைவிட உயர்ந்தவன். அவன் என்ன சொன்னாலும், தீமையைச் செய் என்று சொன்னாலும், மக்கள் அதற்குக் கட்டுப்படவேண்டும் என்று கூறுகிறார். 'இந்தத் தன்னாட்சி உரிமை மன்னனிடம் இல்லை, மக்கள் கையில் இருக்கிறது. ஒரு சட்டத்தை உருவாக்கும் சகல அதிகாரங்களும் மக்கள் கையில் இருக்கிறது, மன்னன் கையில் இல்லை' என்று ரூசோ என்ற அரசியல் அறிஞர் கூறுகிறார்.

மக்களே எல்லாம். மக்கள் கையில்தான் சர்வ அதிகாரங்களும் குவிந்துகிடக்கின்றன. அவர்களே தெய்வங்கள் என்று முதன் முதலாக இந்தத் தன்னாட்சி உரிமைக்கு மக்களே சொந்தக்காரர்கள் என்று முழக்கிய பெருமை பிரெஞ்சு அரசியல் மேதை ரூசோவிற்கே சேரும். தன்னாட்சி உரிமை மன்னன்கையில் இருக்கிறது என்றார், அரசியல் அறிஞர் ஹாப்ஸ். மன்னனுக்கு ஆதரவாளனாக அவர் காட்சியளிக்கிறார். ஆனால், தன்னாட்சி உரிமை மக்கள் கையில் இருக்கிறது என்று கூறி மக்களுக்குச் சாதகமாக வாதிடுகிறார் ரூசோ.

இந்தத் தன்னாட்சி உரிமைக்கு ஆஸ்டின் (1790—1859) என்ற அரசியல் அறிஞர் கொடுத்த விளக்கம், அரசியல் மாணவர்கள் எல்லோரும் அறிந்துகொள்ளவேண்டிய ஒன்று. ஆனால், அதே சமயத்தில் ஆஸ்டினின் விளக்கம் பல பேராசிரியர்களால் வாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுச் சில விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன. ஆஸ்டினின் விளக்கத்தை மூன்று பிரிவாகப் பிரித்து ஒவ்வொன்றையும் தனித் தனியாகப் பார்ப்போம்.

(1) ஒவ்வொரு நாட்டிலும் சட்டங்களை இயற்றும் அதிகாரங்களைக் கொண்ட அதாவது தன்னாட்சி உரிமையைக்கொண்ட ஒரு சக்தி அல்லது ஒரு அமைப்பு இருக்கும். இந்த அமைப்பு அல்லது சக்தி யாருக்கும் கட்டுப்பட்டதல்ல. இதற்கு எல்லாவித அதிகாரங்களும் உண்டு. இந்தச் சக்தியை இரண்டாகப் பிரிக்க முடியாது.

(2) இந்தச் சக்தி ஒரு தனிப்பட்ட மன்னனிடம் இருக்கலாம். அல்லது பலபேர் அடங்கிய ஒரு குழுவில் இருக்கலாம்.

(3) அந்த மன்னனின் கட்டளையே சட்டமாக்கப்படுகிறது. அல்லது அந்தக் குழுவின் கட்டளையே சட்டமாக்கப்படுகிறது. அந்த மன்னனின் கட்டளையே நாட்டின் சட்டமாக மாற்றப்படுகிறது. இந்தக் கட்டளைகளுக்கு, அதாவது சட்டங்களுக்கு கீழ்ப்படிய மறுப்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள். நாட்டின் இந்தச் சட்டங்களுக்கு எதிராக மக்களுக்கு எந்த உரிமையும் கிடையாது.

ஆஸ்டினின் விளக்கத்திலுள்ள இந்த மூன்று பகுதிகளும் அரசியல் அறிஞர்களால் திறனாய்வு (Criticism) செய்யப்பட்டிருக்கின்றன. அதையும் ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

தன்னாட்சி உரிமையை உடைய சக்தியாகிய மன்னனுக்கோ அல்லது குழுவுக்கோ முழு அதிகாரங்களும் உண்டு என்று ஆஸ்டின் கூறுகிறார். ஆனால், உண்மையில் முழு அதிகாரங்களும் மன்னனுக்கோ அன்றி குழுவுக்கோ கொடுக்கப்படவில்லை. உதாரணமாக, இரஷ்யாவை ஆண்டுவந்த ஜார் மன்னன் கொடுங்கோலாட்சி நடத்தினான். தன்னாட்சி உரிமை அதாவது சகல அதிகாரங்களும் எனக்கே இருக்கின்றன என்ற மமதையில் மக்களை வரிசை வரிசையாக நிறுத்திச் சுட்டுத் தள்ளினான். நாடு உருவானதே மக்களுடைய சமுதாயத்தின் நன்மைக்காக. அப்படி இருக்கும்பொழுது சமுதாயத்தை அழிப்பதற்காக மன்னன் அதிகாரத்தை உபயோகிப்பது தவறு. ஆகவே, மன்னனுக்கு சகல அதிகாரங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று ஆஸ்டின் கூறுவது தவறு. ஒரு சில இயற்கைச் சட்டங்களுக்கு — நியாயத்தின் சட்டங்களுக்கு அவன் கட்டுப்பட்டவன். ஆகவே, தன்னாட்சி உரிமை, இது போன்ற நீதியின் செயல்களுக்குக் கட்டுப்பட்டதாகவே இருக்கவேண்டும். ஜனநாயகம், அதாவது மக்களாட்சி அமைப்பு முறையை கொண்ட நாட்டில் சட்டங்களை உருவாக்கும் அதிகாரங்களைக்கொண்டவர்கள், அதாவது சட்டசபை மக்களுடைய விருப்பத்திற்கு கட்டுப்பட வேண்டும். ஜனநாயக நாட்டில் சட்டமியற்றும் அதிகாரம் சட்டசபைக்கு இருந்தாலும், உண்மையிலே அந்த அதிகாரம் மக்கள் கையில்தான் இருக்கிறது. ஏனென்றால்,மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை உறுப்பினர்கள் மக்கள் நன்மைக்கு விரோதமான சட்டங்களை இயற்ற முடியாது. ஆகவே ஜனநாயக நாட்டில் தன்னாட்சி உரிமை மக்கள் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதைத்தான் அரசியல் அறிஞர் டைசி என்பவர் வலியுறுத்துகிறார். ஆகவே, சட்டமியற்றும் அதிகாரங்களையுடையவர்கள் மக்கள் கருத்திற்கு மதிப்பளிக்க வேண்டும்.

ஆஸ்டினின் தன்னாட்சி உரிமை விளக்கம்பழைமைப்பிடியில் ஆழ்ந்து கிடக்கும் ஒரு சமுதாயத்திற்குப் பொருந்தாது என்று ஹென்ரி மெயின் என்பவர் கூறுகிறார். மன்னன் தன் கையில் எல்லா அதிகாரங்களும் இருக்கிறது என்ற காரணத்திற்காக எல்லாச் சட்டங்களையும் போடமுடியாது. சமுதாயத்தின் பழைய பழக்கத்திற்கு விரோதமாக அவன் ஒரு சட்டத்தைத் தனது அதிகாரத்தின்மூலம் அமுல் நடத்துவானேயானால்,தன் பதவியையிழக்க நேரிடும். ஆகவே, சமுதாயத்தின் அந்தப் பழக்கத்திற்கு அவன் தன் ஒப்புதலை அளித்தே தீரவேண்டும். புளூரலிஸ்ட்ஸ் என்று அழைக்கப்படுகிற சிலர் நாடு (அரசாங்கம்) என்பது சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டக்கூடிய ஒரு அமைப்பே தவிர, மக்களின் எல்லா செயல்முறைகளிலும் முழு அதிகாரங்களை உடையது அல்ல என்று கூறுகிறார்கள்.உதாரணமாக,தொழிலாளர்கள் நலனைப் பாதுகாக்கத் தொழிலாளர் சங்கம் இருக்கிறது. மத விவகாரங்களைக் கவனித்துக் கொள்ள மத சம்பந்தமான அமைப்புகள் செயல்படுகின்றன. அது போன்றே அரசியல் விவகாரங்களைப் பார்த்துக்கொள்கிறஅமைப்புத்தான் நாடு (அரசாங்கம்) என்கின்றனர். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதுதான்இவர்கள் கடமையே தவிர, எல்லாத் துறைகளிலும் தனது முழு அதிகாரத்தை உபயோகப்படுத்தக்கூடாது என்பது இவர்கள் வாதம். அந்த அரசியல் துறையில் மட்டும் முழு அதிகாரங்கள், அதாவது தன்னாட்சி உரிமை

உண்டு என்று கூறுகின்றனர். இது தவருகக் கருதப்படுகிறது. சட்டங்களையும்ஒழுக்கநீதிகளையும் அமுலாக்குவதன் மூலம் ஒரு கட்டுப்பாட்டை உருவாக்குவதே நாட்டின் கடமை என்று கூறி, மக் ஐவர் என்பவர் இதை மறுத்துக்கூறுகிருர். ஆகவே, புளூரலிஸ்ட்ஸ் கூற்றுப்படி தன்னுட்சி உரிமை ஒரு குறிப்பிட்ட, அதாவது அரசியல் துறைக்கு மட்டும் அளிக்கப்பட்டிருக்கிறது. இதை யாரும் ஒத்துக்கொள்ளமுடியாது.

தன்னுட்சி உரிமையை இரண்டாகப் பிரிக்கமுடியாது. முழு அதிகாரங்களும் ஒருவன் அல்லது ஒரு குழுவின் கையிலேதான் இருக்க முடியுமே தவிர, இரண்டு பேர் கையிலோ அல்லது இரண்டு குழுக்கள் கையிலோ இருக்கமுடியாது. அப்படி இருந்தால் இரண்டுக்கும் 'மோதல்' ஏற்படும் என்று ஆஸ்டின் கூறுகிருர். ஆனுல், உலக நாடுகளின் அரசியல் அமைப்பைப் பார்த்தால் இந்தக் கருத்துத் தவருனது என்பது தெளிவாகிறது — என்று ஹாமில்டன், மாடிசன் போன்ற அரசியல் அறிஞர்கள் கூறுகிருர்கள். உதாரணத்திற்காக. அவர்கள் அமெரிக்காவின் அரசியல் அமைப்பையே மேற்கோள் காட்டுகிருர்கள்.

அமெரிக்கா, கூட்டாட்சி அமைப்பு (Federation) முறையைக் கொண்டது. அதாவது சட்டமியற்றும் அதிகாரம் மத்திய சர்க்காருக்கும் இருக்கிறது. மாநில சர்க்காருக்கும் இருக்கிறது. இந்தியாவிலும் அதுபோன்றுதான் சட்டமியற்றும் அதிகாரம் மாநில சர்க்காருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தன்னுட்சி உரிமை அதாவது சட்டமியற்றும் அதிகாரம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது என்பது புரிகிறது. ஆனுல் உண்மையிலே சட்டத்தை இயற்றும் அதிகாரம் பிரிக்கப்பட்டிருந்தாலும், அந்தச்சட்டத்தையே திருத்தும் அதிகாரமோ அல்லது சட்டத்தை நீக்கும் அதிகாரமோ மாநில சர்க்காருக்கும் இல்லை மத்திய சர்க்காருக்கும் இல்லை. சட்டத்தை திருத்தும் அதிகாரத்தை உடைய ஒரு குழுவின் (Amending body of the constitution) கையில் இருக்கிறது. இந்தக் குழுவின் கையில் உள்ள அதிகாரம் பிரிக்கப்படவில்லை. ஆகவே, ஆஸ்டின் கூறிய தன்னுட்சி விளக்கம் சரியானதுதான் என்று வேறு சிலர் வாதிக்கின்றனர்.

சட்டத்தையே திருத்தும் அதிகாரம் படைத்த குழு என்ருல், என்ன என்று சிலர் கேட்பர். அமெரிக்காவை உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டு இதைப் பார்ப்போம். அமெரிக்காவிலுள்ள இரண்டு சபைகளான 'காங்கிரஸ்' சட்டத்தைத் திருத்தவேண்டுமென்ருல் 2/3 பெரும்பான்மையில் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும். இதற்கு மாநிலங்களில் உள்ள சட்டமன்றங்களில் 3/4 மன்றங்கள் ஒப்புதல் அளிக்கவேண்டும். அல்லது சட்டத்தைத் திருத்தவேண்டும் என்று 2/3 பெரும்பான்மையில் காங்கிரஸ் தீர்மானிக்க வேண்டும். அதை 3/4 மாநிலங்கள் ஆதரிக்க வேண்டும். அப்படி ஆதரித்துவிட்டால், இந்தத் திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படும். ஆகவே சட்டத்தையே திருத்துகிற அதிகாரம் எந்த இடத்தில் இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை என்ருலும், இதன் மூலம் ஒரு சில விதிகளுக்குட்பட்ட சட்டத்தைத் திருத்தும் அதிகாரம் படைத்த குழுவின் கையில் இருக்கிறது என்பது தெரிகிறது. ஆனுல், குறிப்பிட்ட இந்தக்குழுவிடம் அல்லது அமைப்பிடம் இருக்கிறது என்று சொல்லமுடியவில்லை. எனவேதான், லாஸ்கி என்ற அரசியல் அறிஞர் தன்னுட்சி உரிமை கூட்டாட்சி அமைப்புமுறை உள்ள நாட்டில் குறிப்பிட்ட ஒருவர் அல்லது ஒரு குழுவின் கையில் இருக்கிறது என்று நாம் கூறுவது மிகக் கடினமானது என்று குறிப்பிட்டார்.

கடைசியாக, துன்பம் தருவதாக இருந்தாலும் இன்பம் தருவதாக இருந்தாலும், மன்னன் இட்டதே சட்டம். அவன் கட்டளைக்கு மக்கள் பணியவேண்டும் என்று ஆஸ்டின் கூறியதற்கு எழுந்த மறுப்பைப் பார்ப்போம். ஏற்கனவே நாம் கூறியுள்ளபடி மக்கள் நன்மைக்குத்தான் மன்னனே தவிர, மன்னனின் வாழ்க்கைக்கு மக்கள் அல்ல. மக்கள் நன்மைக்குப் பயன்படுகிற சட்டத்தை மன்னன்இயற்றவேண்டுமே தவிர, தன் சொந்தச் சுயநலனுக்காகச் சட்டத்தை அமுல் நடத்தக்கூடாது. 'மன்னன் இட்டதெல்லாம் சட்டம்' என்று ஆஸ்டினின் வாதம் ஒருவராலும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. சட்டத்தைப்பற்றி ஹென்ரி மெயின் என்பவர் கூறுகையில் "மக்கள் வளர்ச்சியடைய வளர்ச்சியடைய, சட்டமும் வளர்கிறது. தனி மனிதன் சட்டத்தை உருவாக்கவில்லை. ஒரு சமுதாயம்தான் மெள்ள மெள்ள முன்னேற்றப்பாதையில் வளர்ச்சியடைகின்றபொழுது சட்டம் உருவாகிறது" என்று தெளிவாக விளக்கம் தந்தார். இதை ஒரு உதாரணத்தின்மூலம் பார்ப்போம். 1936-ம் ஆண்டில் திருவாங்கூரில் ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. ஜாதிப் பாகுபாடின்றி எல்லா ஜாதியைச் சேர்ந்த இந்துக்களும் கோயிலுக்குள் அனுமதிக்கப்படவேண்டும் என்று அந்தச் சட்டம் கூறியது. சட்டத்திற்கு மக்கள் கீழ்ப்படிந்தார்கள். சட்டத்தை மக்கள் ஒத்துக்கொண்டதால்தான் கீழ்ப்படிந்தார்களே தவிர, சட்டங்களுக்குப் பயந்து கீழ்ப்படியவில்லை. சமுதாயம் முன்னேற்றமடைந்த காரணத்தால் அந்தச் சட்டத்தை உணர்ந்து அதற்குக்கீழ்ப்படிந்தார்கள். ஆகவே சமுதாயத்தின் வளர்ச்சியின் காரணமாகத்தான் சட்டம் உருவாகிறது. ஆனுல், கிரேலி என்ற அரசியல் அறிஞர் மனிதனுடைய நியாய உரிமையின் அடிப்படையில் சட்டம் உண்டாக்கப்படுகிறது என்ருர். அதாவது திருடுவது, கொலை செய்வது ஆகியவைகள் பாவம் என்று மனிதன் உணர்கிருன். இந்த அடிப்படையில் திருடக்கூடாது என்றும் கொலை செய்யக்கூடாது என்றும் சட்டங்கள் எழுந்தன என்று அவர் கூறுகிருர்.இதைப்பற்றித்தெளிவாக 'சட்டம்' என்ற தலைப்பின் கீழ் பின்னர் பார்ப்போம். ஆனுலும் பொதுவான கருத்து எல்லாக் கருத்துகளையும் உள்ளடக்கியிருக்கிறது சட்டத்தை இயற்றும் அதிகாரம், அதாவது தன்னுட்சி உரிமைஎன்பது மக்களுக்கு நன்மை செய்வதையே குறிக்கோளாகக்கொண்டு இயங்க வேண்டும். மக்கள் கையிலேதான் இந்த அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய சட்டங்களை இயற்றி, அதைச் செயலாற்றும் உரிமை மக்களுக்கே அதாவது மக்கள் பிரதிநிதிகளுக்கே என்பது தன்னுட்சி உரிமையின் கொள்கை. இந்த உரிமை இயற்கையின் சட்டங்களுக்கும் அகில உலக சட்டங்களுக்கும் எதிர்ப்பு இல்லாத வகையில்—மக்களைப்பாதிக்காத வகையில் செயல்படுத்தப்படவேண்டும்.

★




பேச்சு மூச்சு இல்லாத நிலையில் தள்ளாத கிழவியொருத்தி சாலையருகில் வீழ்ந்து கிடந்தாள். அந்த அறுபது வயதுக் கிழவியின் அருகிலே முப்பது வயது இளைஞனுல்கூடப் புரட்ட முடியாத விறகுச் சுமையொன்று கிடந்தது. "அம்மா, ஐயோ, அம்மா!" என்று அடிக்கொரு முறை அவல ஒலி எழுப்பிக் கொண்டு, நாலு வயதுச் சிறுமி—மதலையொன்று அந்தக் கிழவியைத் தொட்டுத் தொட்டுப் பார்த்தவண்ணம் சுற்றிச் சுற்றி வந்தது.

அதோ மலையடிவாரத்தில் தெரிகிறதே சிற்றூர், அந்த ஊரைச் சேர்ந்தவள் கிழவி செல்லி. நெடுஞ்சுவர்போல் நீண்டு கிடக்கும் அந்தப் பெருமலைமீது செல்லி ஏறி இறங்காத நாள்—இல்லாத நாள். இருட்டோ, மழையோ, குளிரோ, கொடுங்காற்றோ எதுவும் அவளுக்கு எதிரில்லை. வைகறை வருமுன்னரே எழுந்து சென்றுவிடுவாள் அவள் மலையை நோக்கி. அங்கே வெய்யில் கொளுத்திக் கொளுத்தி நெருப்புக் குழம்பை வாரியிறைத்தாலும் சரி, இடி இடித்து மழை பொழிந்துகொண்டேயிருந்தாலும் சரி, காற்றுச் சுழன்று சுழன்று வீசினாலும் சரி, எல்லாம் செல்லிக்கு ஒன்றுதான். தன் வேலையிலிருந்து, உழைப்பிலிருந்து அவள் விலகுவதேயில்லை; ஓய்ந்தது கிடையாது. ஓய்வதற்கு அங்கே ஆறு இல்லை. விலகினால் வாழவதற்கு வேறு வழி கிடையாது. இன்று, நேற்று, விவரம் தெரிந்த காலத்தையும் முந்தி நிற்கும் பிஞ்சுப் பருவத்திலேயே அவள் அப்படி உழைக்கத் தொடங்கிவிட்டாள்.

காலம் எல்லாம் அவள் கரடுமுரடான பாதையிலேயே நடந்து வந்திருக்கிறாள். கல்லும், முள்ளும் நிறைந்த பகுதி அவள் கண்டு கண்டு பழகிப்போன பகுதி. பள்ளத்தையும், படுகுழியையும், அங்கே அடர்ந்து கிடக்கும் கள்ளிப் புதரையும், அதிலே நெளிகின்ற நச்சுப் பாம்பையும், தேளையும் பிறவற்றையும் தாண்டி, வளைய வளைய வந்தவள் அவள். வாழ்க்கையே அதுவாக, உலகமே அதுவாக ஒன்றிவிட்டவள் அவள். நன்றாகச் செப்பனிடப் பெற்று மெத்தென்றிருக்கும் பெருவழிச் சாலையில் எப்போதோ ஒரு தடவை, என்றோ ஒரு நாள் அவள் அடிவைத்துப் பார்த்ததுண்டு. அங்குகூட அவள் சுமக்க முடியாத பெருஞ் சுமையோடுதான் அடிவைத்திருக்கிறாள்.

வாலைப் பருவமோ, மங்கைப் பருவமோ, தளர்ந்து தள்ளாத நிலையை அடைந்துவிட்ட முதிய பருவமோ—ஆக எல்லாப் பருவங்களிலும் அவள் ஒன்றைத்தான் கண்டிருக்கிறாள். அதுதான் உழைப்பு, உழைப்பு, உழைப்பு. அந்த உழைப்புக்கிடையே ஒரே ஒரு தடவை அவள் இனிப்பையும் கண்டிருக்கிறாள். அது அவள் மங்கைப் பருவத்தில் நிகழ்ந்தது. அந்த இனிப்புக்கூட மேல் பூச்சுப் பூசிய—இனிப்பையுடைய—கசப்பாகத்தான் அமைந்தது அவளுக்கு.

மங்கைப் பருவத்தில் அவள் மணந்தாள் ஒருவனை. அவனும் காலந்தவறினாலும் உழைப்பினைத் தவறவிடாது, அவள் ஏறியிறங்கும் அந்த நெடுமலையில் கட்டை பிளந்து, பிளந்ததைக் கட்டாக்கிச் சுமந்து வந்து, சுமந்து வந்ததை விலை கூறி, விலை கூறி அலைந்து திரிந்து விற்றுப் பிழைத்தவன்; அதன் மூலம் காலத்தை அடித்துத் துரத்திக் கொண்டிருந்தவன். அவனோடு வாழ்ந்த நிகழ்ச்சி; சின்னாள் அவன் நிழலிலே உறைந்து வந்த நிகழ்ச்சி, உள்ளத்தோடு உள்ளம் சேர்ந்து அவனோடு ஒன்றி உறவாடி மயங்கி நின்ற நிகழ்ச்சி, சிறு நிகழ்ச்சிதான். என்றாலும் அந்தச் சிறு நிகழ்ச்சிக்குப் பேராற்றல் இருந்தது. அந்தப் பேராற்றல் தன் பசிய கோலத்தைச் செல்லியின் உள்ளத்திலே பசுமரத்தாணியாகப் பதிய வைத்துவிட்டுச் சென்றே சென்றுவிட்டது.

அவள் வயிற்றிலே மகவு வளர்ந்தது. அந்த மகவு அவளை மலையேற வொட்டாமல் சின்னாள் தடுத்தது. இருவருடைய உழைப்பையும் அவன் கணவன் ஒருவனே ஆற்றி, இருவர் பெறும் வருவாயையும் அவன் ஒருவனே பெற்று வரவேண்டும் நிலை வந்துற்றது. அது கண்டு அவன் சளைக்கவில்லை. உழைத்தான், உழைத்தான்; இரவு பகல் ஓயாது உழைத்தான்.

ஒரு நாள்; நடுப்பகல் வேளை; பேறுகால வேதனை பட்டுக்கொண்டிருந்தாள் செல்லி. அவ்வேளை ஓடி வந்தான் ஒருவன்—மலைமேலிருந்து அவள் குடிலுக்கு. செய்தி சொன்னான் அவன் வெளியில் நின்றபடி.

"உன் கணவன் பாறைமீதிருந்த பருமரம் ஒன்றைப் பிளந்துகொண்டிருந்தான். அவ்வேளை பாறைக்குள்ளிருந்தொரு கருநாகம் வெளிப்பட்டது. அது படமெடுத்தாடி உன் கணவனைப் பட்டென்று தீண்டிவிட்டது. துடித்து வீழ்ந்தான் உன் கணவன். மீளா இடம் நோக்கிச் சிறுபொழுதில் சென்றுவிட்டான் அவன். மலைமீதிருந்து அவனை—அவன் பிணத்தை இங்கே கொணர்வதோ வேண்டாத வேலை. நீயோ பேறுகால வேதனை பட்டுக்கொண்டிருக்கிறாய்! அதனால் சடலத்தை அங்கேயே புதைத்துவிட்டோம். வருந்தவேண்டாம்! இனி வருந்திப் பயனொன்றுமில்லை."

நடந்ததை விரித்து இரங்கலும் கூறி நடந்தான் வந்தவன்.

அவள் செய்தி முழுவதையும் கேட்கவில்லை. பேறுகால வேதனை அவளுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. கறங்கிச் சுழன்று தரையில் வீழ்ந்தாள் அவள்.

மறுபடியும் விழித்துப்பார்த்தாள் அவள். வயிற்றிலிருந்த பாரம் அப்போது குறைந்திருந்தது. உடல்

முழுதிலும் ஏதே ஒருவகை வலி தென்பட்டது. எழமுடியாத நிலை யில் படுத்துக்கிடந்தாள் அவள். கணவனைப்பற்றிய செய்தி அவளுக் குக் கனவாகத் தோன்றியது.

'ஆமாம், அது கனவாகத்தான் இருக்கவேண்டும். அவ்வளவு பெரிய பயங்கரம் உண்மையில் நடைபெற முடியுமா?'

சீறிவரும் கருநாகப்பாம்பு. அது படம் விரித்து உயர்கிறது. விரைந் தோங்கிச் சாடிவிடுகிறது. 'ஆ' என்று அலறியவாறு பாறைமீதி ருந்து வீழ்ந்து உருள்கிருன் அவள் கணவன். 'ஆ' என்று அலறுகிருள் அவள். எழ முயல்கிருள். முடிய வில்லை. தன்னையறியாமல் கேவு கிருள்.

"போனது போய்விட்டது. இனிப் புலம்பித் தவித்துப் பயனென்று மில்லை. இதோ பார், ஊன் மகவு! உன் கணவனை உரித்துவைத்துப் பிறந்திருக்கிறது. அவன் நினைவாக இதனை வளர்த்துவிடு"

அடுத்துவீட்டு அம்மணி தன் முற்றி முதிர்ந்த, சதைப்பிடிப்பற்ற எலும்புக் கரத்தால் செல்லியின் தோளைத் தொட்டுத் தடவிப் படுக்க வைத்து அனுதாபத்துடன் இத மொழி கூறுகின்ருள். பக்கத்தில் 'வீல் வீல்' என்று பிஞ்சுக் குரல் கேட்கிறது. செல்லி அப்பக்கம் உற்று நோக்குகிருள்.

'ஆமாம் அது என் கணவனின் சிற்றுருதான்—அப்படியாளுல்! என் கனவு வெறும் கனவு இல்லையா? அது உண்மைதானு?'

'ஐயோ!' என்று அவள் அலற முனைகிருள். அலறல் குரல்வளைக் குக் கீழே நின்றுவிடுகிறது. கண் கள் மட்டும் நீரைச் சொரிகின்றன.

"நடப்பதையே நம்மால் மாற்ற முடியவில்லை. நடந்துமுடிந்ததைப் பற்றிக் கவலைப்பட்டு என்ன செய்ய முடியும்? தென்பை இழந்துவிடாதே. போனவனைப்பற்றி இனி நினைக் காதே! இதோ உன் நினைப்புக்கும் செயலுக்கும் ஆக்கம் கொடுக்க வென்றே வந்து தோன்றியுள்ள தொன்று. அதைப்பற்றி நினை. நேற்றைய நிகழ்ச்சி நடந்த கதை. இன்றையச் செய்தி எதிரில் உள் ளது."

அம்மணி சொல்லிக்கொண்டே வெளியே நடந்தாள். அவளுக்கும் எத்தனையோ வேலை. 'ஏதோ, அண்டை வீட்டுக்காரி, தன்னை யொத்த உழைப்பாளி, பேரின்னல் சூழ்ந்த நிலையில், ஆதரவற்றுத் தவிக்கிருள். முடிந்ததை உதவியாகச் செய்வோம்' என்று வந்தவள் அங் கேயே குந்தி இருக்க முடியுமா?

மறுபடியும் வீல் என்ற குரல் கேட் டது. செல்லி பக்கவாட்டில் திரும் பிப் பார்த்தாள், அவள் கணவனை உரித்துவைத்துப் பிறந்துள்ள அந்த மதலை, கையையும், காலையும் உத றிக்கொண்டுகிடந்தது.

அவளுக்கு அந்தக் குழந்தைமீது ஒரு கணம் வெறுப்பு ஏற்பட்டது. 'இது என் கணவனின் உயிரைக் குடித்துக்கொண்டல்லவா பிறந்தி ருக்கிறது! இதுவும் செத்துத்தொலை யட்டும். நானும் இதோ போய்விடு கிறேன்.' வெடுக்கென்று திரும்பிக் கொள்கிருள் அவள். மறுபடியும் குழந்தையின் குரல் கேட்கிறது. பக்கவாட்டில் அவளை அறியாமலே அவள் பார்வை செல்கிறது.

'இது என் கணவனின் மகவு. அவரையே சிற்றுருவாகக்கொண்டு விட்ட மகவு. இதைப்பார்த்து அவரை இழந்ததை மறக்கலாம். இதைப்பார்த்து அவரோடு வாழ்ந்த கதையை நினைத்துக்கொள்ளலாம். பழைய கதையின் புதிய உருவாகி விட்ட இந்தக் குழந்தையை வளர்க் கலாம். ஆமாம்! இதை வளர்க் கலாம். வளர்ப்பதற்காகவே வாழலாம்!'

செல்லி குழந்தையின் பக்கம் நகர முயல்கிருள். உடம்பை அசைக்க முடியவில்லை. கையை நீட்டிக், குழந் தையைத் தொட்டு அதனை அணைத் துக்கொள்கிருள்.

திடீரென்று பித்தம் பிடித்துவிட்ட வள்போல் அவள் கேவுகிருள்.

"பச்சை உடம்பை அலட்டிக் காதே அம்மா! ஏதோ போனது போச்சு! இந்தக் குழந்தை முகத் தைப்பாரு. தெம்பாயிரு. — அதை வளர்க்கணுமே நீ!"

சொன்னதையே திரும்பச்சொல் லிக்கொண்டு உள்ளே வந்தாள் அம்மணி.

பழையபடி சொல்லி மலையேறத் தொடங்கிருள்—தனியளாக. உழைக்கவேண்டும் மகவுக்காக, வாழவேண்டும் மகவுக்காக என்ற எண்ணம் சூழ்ந்து நிறைந்துகிடந்த உள்ளத்தில் வேறு கவலைக்கே இடம் கிடைக்கவில்லை. அவள் உழைத் தாள், உழைத்தாள்; உழைத்துக் கொண்டேயிருந்தாள்.

ஆண்டுகள் உருண்டன. குழவி சிறுமியாயிற்று. அதுவும் உழைக் கத் தொடங்கிற்று. அது வளர வளர அதன் உழைப்பும் வளர்ந்து பெரு கிற்று. செல்லியின் துன்பச் சுமையை அது சற்றே இறக்கிற்று.

சிறுமி சிறுமியாகவே இருக்க முடி யுமா? அது அவளாயிற்று. மங்கை யாளுள் அவள்.

செல்லியை இப்போது புதிய கவலை வந்து தொற்றிக்கொண்டது. மங்கையாகிவிட்ட மகளைத் தன் னேடு எப்போதும் வைத்துக் கொண்டிருக்க முடியுமா? எவனிட மாவது ஒப்படைத்துவிடவேண்டுமே!

'ஏன், என்னுடனேயே இருந்து விட்டுப்போகட்டுமே அவள்! என் றென்றும் கன்னியாகவே இருந்து விட்டுப் போகட்டுமே! என்றென்றும் கன்னியாக, என்னிடமே இருந்தால் என்ன? உலகம் அழிந்துவிடுமா? அழிந்துதான் தொலையட்டுமே, மக் களை மாக்களினும் கீழ்நிலைப் பொரு ளாக்கி வாட்டி, வதைத்துப் பிழியும் இந்தக் கேடுகெட்ட உலகம்.'

இறுகிப்போன செல்லியின் உள் ளம் மென்மையிழந்து முரடாகி அப் படி நினைத்தது.

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன செல்லியும், மங்கைப்பருவம் எய்தி நின்ற அவள் மகளும் உழைத்துக் கொண்டேயிருந்தார்கள். ஒரு தடவை செல்லிக்குக் காய்ச்சல் வந்துவிட்டது. அவளால் மலைக்குப் போக முடியவில்லை. மூன்று நாட் கள் ஓய்ந்திருந்துவிட்டாள். முதல் நாள் அந்த மகள்மட்டும் மலைக்குப் போனுள். விறகு கொணர்ந்தாள்; விற்றுவந்தாள். இரண்டாம்நாளும் அப்படியே. மூன்றும்நாள் மாலை நெடுநேரமாயிற்று. மகள் வீடுவந்து சேரவில்லை. என்னவோ, ஏதோ என்று செல்லி இடிந்து நின்றவேளை ஒரு ஆள் வந்தான். அவன் சொன் ஞன்—இல்லை கேட்டாள்: "உன் மகள் பக்கத்து ஊரில் ஓட்டல்வேலை செய்யும் ஒருவனுடன் வண்டியேறிச் சென்ருளே! அவளை நீதான் அனுப்பி வைத்தாயா?"

செல்லி பதறவில்லை. அவள் சிந் தித்தாள். இளமைப்பருவத்தின் துடிப்பும், துணிச்சலும், அதன் அச்சமற்ற தன்மையும் எத்தகை யன என்பதை உள்ளத்துள் அள விட்டு நோக்கினுள். அதோடு கடந்த நாலைந்து மாதங்களாகத் தன் மக ளின் நடவடிக்கையில்கண்ட ஏதோ ஒன்றை, இப்போது மாறுதல் என்று நன்ருகப்புரிந்துகொண்டாள்,

பக்கத்து ஊரில் உள்ள அந்த ஓட்டல்காரப் பையனும் யாரென்பது புரிந்தது. 'பரவாயில்லே. பையன் அடக்கமானவன். ஒழுங்கானவன். என் பெண்ணை வைத்துக் காப்பாற்றுவான். ஆனால், அவனுக்கு ஏதேனும் வராதது வந்துவிட்டால்—என் கணவனுக்கு வந்ததுபோல்' அவள் துணுக்குற்றாள்.

'அவர்கள் இங்கேயே இருந்திருக்கலாமே! சொல்லாமல் கொள்ளாமல் ஏன் அப்படி வெளியேறவேண்டும்?-ஓகோ, இதை நான் அப்போது விரும்பவில்லையா!' அவள் தனக்குத் தானே கேள்வி போட்டு விளக்கம் சொல்லிக்கொண்டாள்.

மகளைப்பற்றிய கவலே பெரிதாக ஒன்றும் செல்லியின் உள்ளத்தை அமுத்தவில்லை. சாதாரண எண்ணத்திற்கு ஒரு படி உயர்ந்த வெறுங் கவலேயாக உள்ளத்தை அது அடைத்துக்கொண்டிருந்தது. அவ்வளவுதான்.

ஓராண்டுக்குப்பின் மகளிடமிருந்து செல்லிக்குக் கடிதம் வந்தது. வடக்கே பம்பாய்அருகே கணவனும் மனைவியும் கூலிவேலை செய்கிறார்களாம். எப்படியோ வாழ்க்கை நடைபெறுகிறதாம். செல்லியும் அவர்களோடு வந்துவிட்டால் நல்லதாம்.

'நானுமா அங்கே போகவேண்டும்! அவர்கள் இங்கே திரும்பி வந்துவிட்டால் போதாதா? இதோ நெடுவரை இருக்கிறது. அதில் ஏறி இறங்கி உழைப்பதற்கு உடம்பில் தென்பு இருக்கிறது. வேறு என்ன வேண்டும்—உழைப்பதைத்தவிர வேறொன்றும் அறியாத எனக்கும், அவர்களுக்கும்?' அவள் தனக்குள் முனகிக் கொண்டாள்.

பத்தாண்டுகள் விரைந்து மறைந்துவிட்டன. அகவை எழுபத்தைந்தைத் தாண்டிவிட்ட செல்லி உடல் தளர்ந்துபோனாள். உழைக்கும் ஆற்றல் குறைந்துபோய்விட்டது. ஒரு நாள் உழைப்பதும், ஒரு நாள் ஓய்வதுமாகக் காலத்தை ஓட்டிக்கொண்டிருந்தாள்.

திடும் என்று ஒரு நாள் தன் மகள் எதிரில் வந்து நிற்பாள் என்று செல்லி எதிர்பார்க்கவில்லை. அதுவும் அவள் தன்னந்தனியளாய் வந்து நின்றாள். எழிலும், பொலிவும், இளமைச் செவ்வியும் நிரம்பி வழிய, மிடுக்கும், துடிப்பும் நிறைந்தவளாக வளர்ந்து குலுங்கிக்கொண்டிருந்த நிலையில் தன்னைப் பிரிந்த தன் அருமைச் செல்வியின் அழகுருவம்தான் அவள் மனத்துள் குடிகொண்டு வளைய வந்தது அந்நாள் வரை. ஆனால் இன்று! எழிலிருந்து நடமிட்ட அந்தப் பழைய உருவைக் கனவுக் காட்சியாக்கிவிட்டு வெறுங் கூடாக எதிரில் நின்றாள் அந்த மகள். பொலிவில்லை வதனத்தில். அங்கே துன்பத்தின் கொடு வரிகள் படர்ந்து கிடந்தன. ஒளியில்லை கண்களில். அங்கே ஏக்கமும், சோகமும் நிரம்பி வழிந்தன. உழைத்திளைத்து எலும்புக்கூடாகிவிட்ட உடல்;—அது ஆறுமாதக் கருவொன்றை அடிவயிற்றில் சுமந்து கொண்டிருந்தது. அந்த மகளின் சோகக்குரல் சொன்ன கதை இது தான்:

"நலம் என்ற பொருள் எங்களை நெருங்கி வரவில்லை; தொட்டுத்தடவ விழையவில்லை. தூரத் தூர ஒதுங்கி ஒதுங்கியே நின்றுகொண்டிருந்தது. என்றாலும், ஏதோ வாழ்வென்று நானும், என் கணவரும் வாழ்ந்து கொண்டுதான் வந்தோம். அடுத்தடுத்துக் குழந்தைகள் மூன்று பிறந்தன. அவை எங்கள் துன்பத்தைப் பெருக்கிவிட விரும்பவில்லைப் போலும்! பிறந்த சுவடு தெரியாமல் அடுத்தடுத்து மறைந்துபோய்விட்டன. அந்தமட்டும் நன்மைதான் பலவகையில்.

"மூன்று மாதங்களுக்குமுன் என் கணவர் வழக்கமாகச் செய்துவந்த கூலிவேலே நின்றுவிட்டது. வேறிடத்தில் வேலேதேடி அவர் அலைந்தார். நான் மட்டும் உழைத்தேன். போதவில்லை வருவாய். பெருகிற்று துன்பச் சுமை.

"இரண்டுவாரங்களுக்கு முன் 'வேலே கிடைத்துவிட்டது. மாதச் சம்பளம்; கைநிறையச் சம்பளம்' என்று என் கணவர் சிறுபிள்ளையைப்போல குதித்துக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தபோது நான்தான் அதிகமாக மகிழ்ந்தேன். அந்த மகிழ்ச்சிப்பெருக்கிலும், மயக்கிலும் 'வேலே என்ன' என்று கேட்கமறந்து விட்டேன் நான்.

"என் மகிழ்ச்சி, அது தந்த மயக்கு, வாரமொன்றைக்கூடமுழுதுமாகக் காணவில்லை. ஐந்து நாட்கள் தாம் என் கணவர் வேலேக்குப் போய்த் திரும்பிவந்தார். ஆறாவது நாள் அவர் வரவில்லை. வெற்றுடல் வந்தது மருத்துவமனை வண்டியில்.

"அப்போதுதான் சொன்னார்கள்; அவர் சென்று புரிந்த தொழில் பேரிடர் நிறைந்த தொழிலாம். பெரியதொரு கட்டிடத்தின், மிக உயரத்தில் ஏறி மின் பொறிகளைத் துடைக்கும் வேலேயாம். சிறிது தவறினாலும் உயிர்க்கிறுதிதானாம். அவர் அறிந்துதான் அதில் ஈடுபட்டிருக்கிறார் 'உயிர் வாழவேண்டுமே யென்று. வாழ்ந்தாரா! என்னை வதைத்துவிட்டார்!"

செல்லி சிறிது நேரந்தான் கலங்கி நின்றாள். பிறகு உள்ளத்தில் என்றுமில்லா உறுதியை ஏற்றிக்கொண்டாள். உடலே இரும்பாக மதித்துக் கொண்டாள். தள்ளாமை, தளர்ச்சியெல்லாம் மறைந்தோடிவிட்டன—அவள் மனத்தினின்று.

நான்கு மாதங்கள் சென்றன. செல்லியின் மகள் ஒரு மகவுக்குத் தாயானாள். அதன் பிறகு அவள் தேறி எழவில்லை. அதை அவள் விரும்பவில்லேயோ, என்னவோ! போய்விட்டாள் அவள் தான்பெற்ற சேயைத் தன்னைப் பெற்ற தாயிடம் ஒப்படைத்துவிட்டு.

துன்பம் பெருகப் பெருகச்செல்லியின் மனம் மேலும், மேலும் இறுக்கம் கண்டுகொண்டே போயிற்று. முனைந்து உழைத்தாள் அவள். அந்த மதலேயைத் தன்னால் முடிந்த வரை பேணிப் போற்றிப் பாதுகாத்தாள் அவள். ஆனால் அவள் எண்ணியது எண்ணியாங்கியற்ற, உழைக்க, உயிர் தரிக்க உள்ள வலி மட்டும் போதுமா? உடல் வலியும் வேண்டுமே! அவளை அறியாமல்—அவளை ஏமாற்றிவிட்டு அது எங்கோ போய்விட்டது. போய்விட்டதை எண்ணித் தன்னை மிஞ்சிக்கொண்டு அவள் செயல் புரிந்தாள். வயதும், வலிவுமான காவலர்கள் இல்லாத அவளுடைய வெற்றுக் கூண்டாம் உடலுக்குள் நின்றும், ஊசலாடியும் தவித்துக்கொண்டிருந்த உயிர் எனும் பறவையை அவள் சுமக்க முடியாமல் சுமந்துகொண்டு வந்த பெருஞ்சுமை தட்டிப் பறித்துக் கொண்டு போய்விட்டது. அதோ, அவள் — அந்தக் கூண்டு — கிடக்கின்றது பிணமாக!

அந்தப் பிணத்தைத் தொட்டுத் தொட்டுப் பார்த்தவண்ணம் அதோ அந்த மதலே சுற்றிச் சுற்றி வருகின்றது. இனிச், செல்லி எழுவாளா? இனிக் காப்பது யார் அந்த மதலேயை?

★

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்... } அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

2-ம் பக்கத் தொடர்ச்சி

சங்கிலித் தொடராக ஊதித் தள்ளினேன். நண்பனின் சொற்களோடு சுருதி கூட்டியபடியே எண்ணங்கள் பின்னோக்கிச் சென்றன.

நான்கு நாட்களுக்கு முன்னால்...! மனிதன்தான் இடக்குச் செய்கிறான் என்றால், என்னுடைய காரும் இடக்குச் செய்துவிட்டது. இந்தக் காலத்தில்தான் மனித வாழ்க்கைக்கும் இயந்திரத்திற்கும் பெரும்பாலும் வித்தியாசம் இருப்பதில்லையே!

நான் நகர மோடார் ஒன்றில் ஏறி மருத்துவமனைக்குச் செல்ல எண்ணியவனாக மோடார் நிற்கும் இடத்திற்குச் சென்றேன். அங்கே! ஒரு குரல்! உயிரோடு போராடும் ஒரு குரல்! போராட்டத்திற்கிடையேயும் குரலெழுப்பி ஈடுகொடுத்தது. வழக்கமாக எங்கும் கேட்கும் பாணியில்தான்.

'ஐயா! ஏதாவது கொடுங்களய்யா! பத்து நாட்களாகப் பட்டினி' என்றான். என்னைப் பார்த்தவுடன் என்ன எண்ணினானோ, விடாப்பிடியாக அடம்பிடித்தான். இத்தனையும் படுத்த படுக்கையிலேயே.

முதலில் வேதனை பட்டுக்கொண்டிருந்த என் மனம்கூடச் சற்று இரங்கிற்று. ஏதாவது ஒரு நாலணா ...!எனது 'டாக்டர்' மனமும் அவன் சாவோடு போராடிக்கொண்டிருக்கிறான் என்பதை எடுத்துக்கூறிற்று.

இந்த நிலையில், 'ஹலோமிஸ்டர் டாக்டர் சேகர்'. காசைப் போடாமலே திரும்பிப்பார்த்தேன். எனக்குத் தெரிந்த ஒருவர் தன் காருடன் என் முன்னாலே இருந்தார். 'வாருங்கள், ஆஸ்பத்திரிக்குத்தானே, நான் அவ்வழியாகத்தான் போகிறேன்.' அவ்வளவுதான் நான் அந்த உயிர்ப் போராட்டக்காரனை மறந்தேவிட்டேன்.

அவன் நான் போகப்போவதை எண்ணித்தானோ என்னவோ, அடி வயிற்றில் கையை வைத்து அமுக்கியபடியே தன்னுடைய மூச்சுக் குழல் யாவற்றையும் ஒரு முறுக்கு முறுக்கிக் கத்தினான்.

நான் திரும்பினேன். என் நண்பர் என்னைப் பார்த்தார். அந்தப் பார்வையில் பலப்பல பொருள்கள் பொதிந்து என்னுடைய கவுரவத்திற்கே அறைகூவல் விடுவது போன்றுபட்டது. நான் சட்டெனக் கதவைத் திறந்து அமர்ந்துகொண்டேன்.

*

நான்கு நாட்கள் கழிந்தது. வஞ்சிக்கோனுடன் இன்றும் வாதமிட்டேன். இன்று அதே ஆள், நகர உந்து நிலையத்தில் சாவோடு போராடிக் கொண்டிருந்தவன், தோல்வியுற்ற நிலையில் மருத்துவ மனையில் உள்ள பிண அறுவைக்கூடத்தில்... அவனை நான் எண்ணிஇருந்தால்...? அவன் சாவுக்கு யார் பொறுப்பாளி? இந்தக் கேள்விக்குப் பதில்?

வஞ்சிக்கோனின், 'டாக்டர்கள் எல்லாம் அரசினரால் அனுமதிக்கப்பட்ட கொலையாளிகள்' என்ற சுடுசொல்.

என் சிந்தை குழம்பியது. வஞ்சிக்கோன் மட்டும் அப்பொழுது வந்திருந்தால் அப்படியே அவனைக் கட்டிப்பிடித்து முத்தமிடவேண்டும் போல் இருந்தது.

எந்தக் கத்தியைக்கொண்டு உடலைக் கீறிச் சாவுக்குரிய காரணத்தைக் கண்டுபிடிப்பது? அவன் சாவு கொலையா? தற்கொலையா? நோயா? நொடியா? பசியா? அவன் சாவுக்குப் பொறுப்பாளி யார்? குற்றவாளி யார்? என் மனம் என்னையே தாக்கியது.

அருகே இருந்த துணையாளனைக் கூப்பிட்டு அறுவைக்குரிய குறிப்பேட்டை எடுத்துவரும்படி கூறினேன். ஓய்வறையிலே உட்கார்ந்து எழுத ஆரம்பித்தேன்.

துணையாளன் புரியாத நிலையில் 'போஸ்மார்டம் செய்யாமலேயே?'

'ஆமாம்... ஆமாம்... அவன் சாவுக்கான காரணம் எனக்குத் தெரியும்'

துணையாளன் என்ன எண்ணினானோ மெல்ல நகர்ந்துவிட்டான். என் மனத்தின் சுழல்கள் மட்டும் எழுந்தபடியேஇருந்தன. இதயத்தின் அடித்தளத்தில் விழுந்துகிடக்கும் பாறையைப்பற்றி வேறு யாருக்குத்தான் தெரியமுடியும்.

★

## செங்கற்பட்டு மாவட்ட தமிழ் எழுத்தாளர் மாநாடு

—[*]—

டிசம்பர் 25, 26 ஆகிய இருநாட்கள், சென்னையை அடுத்துள்ள வில்லிவாக்கம், சிங்காரம் பிள்ளை உயர்நிலைப் பள்ளியில் நடைபெறும்.

இம்மாநாட்டில் கல்வித்துறை முதல்வர் சுந்தரவடிவேலு, அமைச்சர் பக்தவச்சலம், அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், மா. பொ. சி. டாக்டர் மு. வ. பேராசிரியர். மா. கி. தசரதன் மற்றும் பலர் கலந்துகொள்ளுவார்கள்.

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிட்டப்பட்டு வெளியிடப்படுகிறது.